விலை: 30.00
பக்கங்கள் - 24
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 10 சனிக்கிழமை (25.07.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 219

## இலங்கையின் ஆதிக் குடிகள் தமிழரே என்று கூறியதற்காக
# நீதியரசர் விக்னேஸ்வரனிடம் பொலிஸார் தீவிர விசாரணை



(யாழ்ப்பாணம்)

இலங்கையின் மூத்த குடிகள் தமிழ் மக்களே என நீதியரசர் விக்னேஸ்வரன் வெளியிட்ட அறிக்கை தொடர்பாக பொலிஸார் நேற்று அவரிடம் இரண்டு மணிநேரம் தீவிர விசாரணை செய்தனர்.

கொழும்பிலிருந்து விடப்பட்ட உத்தரவின் பேரில் நல்லூரில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து இந்த விசாரணை இடம்பெற்றது.

விக்னேஸ்வரனின் அறிக்கை [illegible]ளிற்கிடையில் முறுகலை ஏற்படுத்தும் எனக் குறிப்பிட[illegible] அவ்வாறான அறிக்கையை வெளியிட்

22

## வவுனியாவில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா கிடாச்சூரி பகுதியில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் கிடாச்சூரி பகுதியில் உள்ள வீடொன்

22

## கடலில் தவறி வீழ்ந்த மீனவர் காங்கேசன்துறையில் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை கடற்பரப்பில் மீன்பிடிக்கச் சென்று கடலில் தவறிவீழ்ந்த வயோ

22

## கிளிநொச்சியில் விபத்து
### ஒருவர் ஸ்தலத்தில் பலி



(முறுகண்டி)

கிளிநொச்சி ஜெயபுரம் பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த விபத்து சம்பவம் நேற்று

22

## தமிழ் மக்களை வெருட்டி அரசு பணிய வைக்க முடியாது
### பொலிஸ் விசாரணை தொடர்பில் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களை வெருட்டிப் பணிய வைக்கலாம் என்று அரசாங்கம் நினைத்தால் தயவு செய்து உங்களின் எண்ணத்தை மாற

22

## தேர்தல் சுவரொட்டியுடன் வட்டுக்கோட்டையில் நால்வர் கைது

(அராலி)

வேட்பாளர் ஒருவரின் சுவரொட்டியை சுவரில் ஒட்டிய நால்வர் நேற்று இரவு வட்டுக் கோட்டைப் பொலிஸா

22

## நல்லூர்க் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்
### அலங்காரக் கந்தனை தரிசிக்க அடையாள அட்டை அவசியம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந் திருவிழா இன்று

22

## விக்னேஸ்வரனின் பிரசாரத்தில்
### மோப்ப நாய் உதவியுடன் பொலிஸார் சோதனை



(யாழ்ப்பாணம்)

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று வல்வெட்டித்

22






## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (3395)

தொடர்பு : Tel - 077 340 5951
Email : engchelvam@gmail.com

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


குருவே துணை

வாழ்க வையகம்



வாழ்க வளமுடன்

### அன்பர்களின் வேண்டுகோளுக்கமைய மீண்டும் மனவளக்கலை யோகாப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

கடந்த சில மாதங்களில் உலகம் முழுவதும் நடைபெற்ற கொடியகிருமித் தொற்றிலிருந்து மக்கள் இயல்பு நிலைக்கு திரும்பியிருப்பினும் இன்னும் உலக தலைவர்களும் விஞ்ஞானிகளும் வைத்தியர்களும் மற்றும் சுகாதாரத்துறை சார்ந்த அனைவரும் மக்களுக்கு அறிவுறுத்துவது மக்கள் தங்களுடைய நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க யோகப் பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும் என்பதே. அதனை வழங்குவதே அருட்தந்தை யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்களின் மனவளக்கலை யோகாப் பயிற்சிகள் ஆகும்.

மேலும் இம்முறை (Zoom) இணையத்தளம் மூலம் பயிற்சிகள் இந்தியப்பேராசிரியரால் வழங்கப்பட இருப்பதனால் அனைவரும் இவ் அரிய சந்தர்ப்பத்தினை தவறாது பயன்படுத்தி பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

- எளியமுறை உடற்பயிற்சி
- எளியமுறை தியானப்பயிற்சி
- காயகல்ப்பப் பயிற்சி
- அகத்தாய்வுப் பயிற்சி

காலம் : 25.07.2020 சனிக்கிழமை தொடக்கம் 31.07.2020 வெள்ளிக்கிழமை வரை

நேரம் : மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணி வரை

பயிற்சி வழங்குபவர் : மனவளக்கலைப் பேராசிரியர் வே.பாஸ்கரசுந்தரம் அவர்கள்

துணைப்பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன் அவர்கள்

குறிப்பு : கொவிட் - 19 சமூக பாதுகாப்பு விதிகளுக்கமைவாக பயிற்சிகள் வழங்கப்படுவதால் மட்டுப்படுத்தப்பட்ட பயிற்சியாளர்களே உள்வாங்கப்படுவர்.

எதிர்வரும் 25.07.2020 சனி மற்றும் 26.07.2020 ஞாயிறு தினங்களில் அகத்தாய்வு 2ம் நிலை பயிற்சியானது காலை 9.00 மணியிலிருந்து மதியம் 1.00 மணி வரை இந்தியா (தமிழ்நாடு) பேராசிரியர் லில்லிபாய் அவர்களால் நடாத்தப்படும்.

தொடர்புகளிற்கு :

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.இல : 021 222 2772 (C-9941)


## பாராளுமன்றத் தேர்தல் - 2020

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

சமஉரிமையுடன் நிறைவான அபிவிருத்தியை நோக்கி...



அ.கிருபாகரன்
கிருபா லேணர்ஸ் அதிபர்



X 2

ஐக்கிய மக்கள் சக்தி (C-110)


## மரண அறிவித்தல்



### நளினி அழகராஜா

யாழ்ப்பாணம் உடுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நளினி அழகராஜா 21.07.2020 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் இராஜரட்ணம் - தையல்நாயகி தம்பதியினரின் அருமை மகளும் தர்மலிங்கம் - சவுந்தரம் தம்பதியினரின் அருமை மருமகளும் அழகராஜாவின் அன்பு மனைவியும் அருண், கரன் ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை கனடாவில் நடைபெறும். (3396)

37/11, 1ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,யாழ்ப்பாணம்.


077 353 3109
021 222 8218

தகவல்:
பரமநாதன் குடும்பம்


# வெலிக்கடைச் சிறைப் படுகொலையின் 37 வது ஆண்டு நினைவேந்தல்

(ஜூலை 25,27)

## தமிழ்த் தேசிய வீரர்கள் தினம் – ஜூலை 25



தலைவர்
தங்கத்துரை



தளபதி
குட்டிமணி



முன்னணி வீரர்
ஜெகன்

இலங்கையில் 1983ஆம் ஆண்டு நடைபெற்ற இனப் படுகொலையின் கோரத் தாண்டவத்தின் ஒரு படலமாக கொழும்பு வெலிக்கடைச் சிறைச் சாலையில் இடம்பெற்ற படுகொலைகளில் கொல்லப்பட்ட **தலைவர் தங்கத்துரை, தளபதி குட்டிமணி, ஜெகன்,** தேவன், நடேசுதாசன், சிவபாதம் மாஸ்ரர், டாக்டர் இராஜசுந்தரம், குமார், சிறீகுமார், மரியாம்பிள்ளை, குமாரசிங்கம் உட்பட 53 தமிழ் அரசியல் கைதிகளுக்கும் தமிழ் இன விடுதலைப் போராட்டத்தில் கொல்லப்பட்ட

ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ்ப் பொது மக்களுக்கும் மாவீரர்களுக்கும், வீர மறவர்களுக்கும் எமது வீர வணக்கம். கண்ணீர் அஞ்சலி.

விளம்பர அனுசரணை: எம். கே. சிவாஜிலிங்கம், செயலாளர் நாயகம், தமிழ்த் தேசியக் கட்சி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்.

தொலைபேசி – 077 772 9020

**தமிழ்த் தேசியக் கட்சி (TNP)**

(3394)

# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

## ஊடகங்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோள்

(கொழும்பு)

**பொதுத் தேர்தலின் போது அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றி சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள வழிகாட்டல்களை ஊடகங்கள் நிச்சயம் பின்பற்ற வேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.**

நாட்டில் காணப்படும் வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு மக்களிடையே வெறுப்பூட்டும் மற்றும் பொறுமையிழக்கச் செய்யும் வகையிலான பிரசாரங்களை ஒலி அல்லது ஒளிபரப்புதல் பிரசுரித்தல் தவிர்க்கப்பட வேண்டும் என்பதை இதனூடாக ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது. இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அரசியலமைப்பின் 104 ஆ (5) (ஆ) உறுப்புரைக்கமைய கடந்த ஜூன் மாதம் 3 ஆம் திகதி அதிவிஷேட வர்த்தமானி மூலம் தேர்தகள் ஆணைக்குழு ஊடகங்களுக்கான வழிகாட்டல் நெறிகளை வெளியிட்டது. இதில் 24 மற்றும் 25 ஆம் இலக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் மனித உரிமைகள் ஆணைக்குழு அவதானம் செலுத்தியுள்ளது.

அவற்றில் 24 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி மத நம்பிக்கைகள், சமய பின்பற்றுதல்கள், பேச்சுமொழி, இனம், பழக்கவழக்கங்கள், குலம் கோத்திரங்கள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இலங்கை மக்களிடையே வெறுப்பூட்டும், பொறுமையிழக்கச் செய்யும் அல்லது பொறுமையிழக்கச் செய்யப்படும் வகையிலான பிரசார நடவடிக்கைகளை ஒலி அல்லது ஒளி பரப்புதல் பிரசாரம் செய்தல் அல்லது பிரசுரிப்பதனை தவிர்க்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் உயிரோட்டத்தை பாதுகாப்பதற்காக எவரும் விடுபடாத தேர்தலொன்றை நடத்துதல் அத்தியாவசியமானதாகும். பொது மக்களிடத்தில் அரசியல் கட்சிகள் அல்லது சுயேட்சை குழுக்களின் கருத்துக்களை எடுத்துச் செல்லும் போது பிரதான ஊடக மாக வெகுசன ஊடகங் களுக்கு பாரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய பிற் போக்கின்றிய ஊடக செயற்பாட்டின் ஊடாக தமது பாரிய பொறுப்பை நிறைவேற்றுவார்கள் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மிகவும் உயர்ந்த எதிர்பார்ப்பொன்றை ஊடகத்துறை மீது கொண்டுள்ளது.

இது தொடர்பாக தமது முனைப்பானதும் நடுநிலையானதும் தலையீட்டை முன்னேறிய ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் சமூகமொன்றைத் தோற்றுவிப்பதற்காக ஊடகங்களிடமிருந்து எதிர்பார்க்கின் றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)


# பாராளுமன்றத் தேர்தல் - 2020

யாழ்.மாவட்டம்




"இரண்டு தேசங்கள் ஒரு நாடு"



நடராஜர் காண்டீபன்

(சட்டத்தரணி)

சட்ட ஆலோசகர்,

தமிழ் தேசிய மக்கள் முன்னணி

(அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்)

2 4 10

(C-100)

தாயகம் - தேசியம் - சுய நிர்ணய உரிமை


## வாக்காளர் அட்டைகள் விநியோகம் 68 வீதம் நிறைவடைந்துள்ளன

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகப் பணிகள் சுமார் 68 வீதம் நிறைவடைந்துள்ளதாக தபால்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய இதுவரையில் 110 இலட்சத்து 26 ஆயிரத்து 558 வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 26 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்ட வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் பணிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை இடம்பெறுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் பொது மக்கள் குறித்த காலப்பகுதியில் வீடுகளில் இருக்குமாறும் தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன கேட்டுக் கொண்டுள்ளார். (ஜ-4)




# பாராளுமன்றத் தேர்தல் - 2020

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்

1 அங்கஜன் இராமநாதன்
BSc.(Eng), MBA (International).

**எனது அன்புக்குரிய வாக்காளப் பெருமக்களே!**

**20 வருடங்களாக துக்கத்தில் தூங்கிக் கொண்டிருந்தது போதும்! மக்களே! விழித்தெழுங்கள்! ஒரு மாபெரும் வாக்குப் புரட்சிக்கு! அரசியல் உரிமைகளையும் அபிவிருத்தியையும் அறுவடை செய்யத் தயாராகுங்கள்!**

- ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள், மாநாடுகள், பேச்சுக்கள், குழு நியமனங்கள், கலந்துரையாடல்கள், வீர வசனங்கள் என்பவற்றை......... **செய்பவர்கள் செய்யட்டும்! நம்புவர்கள் நம்பட்டும்! நாங்கள் முட்டாள்கள் அல்ல, நீங்கள் ..?**
- ஒவ்வொரு ஐந்தாண்டுப் பதவியில் சுகபோகமாக காலத்தை ஓட்டி, மீண்டும் அடுத்த ஐந்தாண்டுக்காக ஊருக்குள் முகங்காட்டும் அரசியல் வாதிகளை ஓட ஓட விரட்ட 2020 தேர்தலில் தமிழ்த் தேசத்தின் இளைஞர்கள் யுவதிகள் வாக்குப் புரட்சி செய்வதற்கு தயராகி விட்டார்கள்! மற்றையவர்களும் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்.
- அபிவிருத்தி என்ற பெயரில் பூனைக்கு குரங்கு அப்பம் பகிர்ந்து கொடுத்த மாதிரியான செயற்பாடுகளை ஊதிப் பெரிதாக்கி, வாக்கு வேட்டையில் இறங்கிய வஞ்சகர்களை மக்கள் இந்தத் தேர்தலில் புறக்கணிப்பர்!
- எங்களைப் பலப்படுத்தினால்தான் பேரம் பேசலாம் என்று அன்றிலிருந்து இன்று வரை வாக்கு வேட்டை செய்து நாடாளுமன்றம் சென்றவர்கள் இன்று வரை பேரம் பேசிச் சாதித்தது என்ன'? இந்தத் தேர்தலில், சர்வதேச சந்தையில் பேரம் பேசி சாதிப்போம் என்று உங்கள் காதில் பூ சுற்றுவார்கள்! நீங்கள் நம்பத் தயாரா?
- சிறிசேன, ரணில், மாவை, கூட்டு நல்லாட்சியின் பங்காளர்களாக இருந்த போது தீர்வுப் பொதியை மாத்திரமே தூக்கி அலைந்து திரிந்து, எந்தவிதமான பொருளாதார அபிவிருத்தியையும் எங்கள் பிரதேசத்திற்குக் கொண்டு வராமல், அரசியல் சந்தர்ப்பத்தை நழுவ விட்ட அரசியல் வாதிகள் இனி ஆளப்போகும் எங்கள் ஆட்சியில் அவர்களால் எதிர்ப்பு அரசியலில் இருந்து எதுவும் செய்யமுடியும் என்று நம்புகிறீர்களா?
- ஏழு பழைய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் வீட்டுக்கு அனுப்புங்கள்! ஏழு புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களை மக்களாகிய நீங்கள் தெரிவு செய்யுங்கள்.
- எமது தமிழ் தேசம் ஒளிமயமான தேசமாக மிளிரும் என்பதில் அங்கஜன் அணிக்கு எந்தவிதமான ஐயமும் இல்லை.
- எமது வாழ்க்கை, எமது கையில். எனவே இந்தத் தேர்தலில் ஒரு நல்ல மாற்றத்தை உருவாக்க ஒரு மாபெரும் வாக்குப் புரட்சியின் மூலம் கை சின்னத்துக்கும் எனது வெற்றி இலக்கமாகிய இலக்கம் 5 இற்கும் வாக்களித்து உங்கள் வெற்றியை நிலைநாட்டுங்கள்!

**ஆளும் கட்சியும் அடுத்த ஐந்தாண்டுக்கு ஆட்சியில் இருக்கப் போகும் கட்சியான எங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் வடமாகாணத்தில் பாரிய அபிவிருத்தியை மேற்கொண்டு, வேலையில்லாப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவோம் என்பதில் எந்த விதமான ஐயப்பாடும் இல்லை.**

- தமிழ்த் தேசத்தில் இருக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சரியான பலனடையக்கூடிய தூர நோக்குடைய திட்டங்களை நான் வகுப்பேன் என்றும் உங்களுக்கு உறுதிபடக் கூறுகின்றேன்.



பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம் (விண்ணன்)

5

**"உங்கள் வாக்கு உங்கள் உரிமை சரியான முறையில் வாக்களியுங்கள்!"**

தமிழ்த் தேசியமும் தமிழ்த் தாயும் வாழ்க.

facebook.com/vinnan05

(C-105)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி

# எவருக்கும் மன்னிப்பே கிடையாது

## பசில் ஆவேசம்

(கொழும்பு)

மகிந்த மேர்வினுக்கு இரக்கம் காட்டியது போல் இம்முறை அப்படி நடக்காது என பொதுஜன பெரமுனவின் அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் தேர்தலில் போட்டியிடுபவர்களையும் கட்சியின் தற்போதைய மேயர்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களையும் ஒழுங்கான விதத்தில் நடந்துகொள்ளுமாறும் பசில் ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.

பொருத்தமற்ற சில வேட்பாளர்களுக்கு தேர்தலில் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியமைக்காக பொதுஜன பெரமுனவின் தேர்தல் வேட்பாளர் நியமன சபையை பசில் ராஜபக்ஷ கடுமையாக சாடியுள்ளார்.

அண்மையில் பெண்வேட்பாளர் ஒருவர் காணொளி ஒன்றை எனக்கு அனுப்பி பொதுஜனபெரமுன கழுதைகளுக்கும் குதிரைகளுக்கும் வேட்புமனுவை வழங்கியுள்ளது என குறிப்பிட்டார்.

நான் அதனை மறுத்ததுடன் நிச்சயமாக கட்சியின் வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான சபையில் கழுதையொன்று இருக்கவேண்டும். அதன் காரணமாகவே உங்களுக்கு வேட்புமனு கிடைத்துள்ளது என தெரிவித்ததாக பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ஜ-4)




# ஜூலை கலவரத்தை நினைவூட்டும் வகையில் பிரித்தானியாவில் கவனயீர்ப்புப் போராட்டம்

(பிரிட்டன்)

1983 ஜூலை 23ஆம் திகதி திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட தமிழின அழிப்புக்கு எதிரான தினத்தை நினைவூட்டும் முகமாகவும் மற்றும் இதற்கான கண்டனத்தை தெரிவிக்கும் விதமாகவும் பிரிட்டனில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு முன்பாக கண்டன ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன் தினம் முன்னெடுக்கப்பட்டது.



ஐதராபாத் கார்டன்ஸ்ஸில் அமைந்திருக்கும் இலங்கைத் தூதரகத்திற்கு முன்பாக இடம்பெற்ற குறித்த ஆர்ப்பாட்டத்தில், தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்டு 37 வருடங்கள் ஆன பின்பும் சர்வதேசம் இதனை இனப் படுகொலை என ஏன் இன்னும் பிரகடனப்படுத்தவில்லை என்பதனை இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் வலியுறுத்தினர். (ஜ-4)

## பாராளுமன்ற அமர்வுகளுக்கு சுகாதார வழிகாட்டல் முறை



(கொழும்பு)

பொதுத் தேர்தலின் பின்னர் கொவிட் -19 சவாலுக்கு முகங்கொடுத்து சுகாதாரப் பாதுகாப்புடன் பாராளுமன்ற அமர்வுகளை முன்னெடுப்பதற்குத் தேவையான சுகாதார வழிகாட்டல் தொகுப்பொன்றைத் தயாரிக்கும் நடவடிக்கைகளை ஆராய்வதற்கு சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் லக்ஷ்மன் கம்லத் உள்ளிட்ட சுகாதார அமைச்சின் அதிகாரிகள் குழு நேற்று முன்தினம் பாராளுமன்றத்துக்கு விஜயம் செய்துள்ளது.

பொதுத் தேர்தலின் பின்னர் ஆரம்பிக்கவிருக்கும் பாராளுமன்றத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள் மற்றும் பிரபுக்கள், பாராளுமன்ற பணியாளர்கள், பாதுகாப்புப் பிரிவினர்களை கொவிட் -19 சூழலிலிருந்து பாதுகாப்பதற்கான வேலைத்திட்டங்களை தயாரிப்பதற்கு இந்த விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த விஜயத்தின் பின்னர் மருத்துவர் குழுவுக்கும், பாராளுமன்ற அதிகாரிகள் குழுவுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலில் தற்பொழுது பாராளுமன்றத்தில் கடைப்பிடிக்கப்படும் சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் காணப்படும் நடைமுறை சவால்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. (ஜ-4)

## தாய், தந்தையின் இனம் குறிப்பிடப்படும்

# டிஜிற்றல் பிறப்புச் சான்றிதழ் தொடர்பில் பதிவாளர் நாயகம் விளக்கம்

(கொழும்பு)

புதிய டிஜிற்றல் பிறப்புச் சான்றிதழில் முன்மொழியப்பட்ட மாற்றங்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தும் அறிக்கையொன்றை பதிவாளர் நாயகம், என்.சீ. விதானகே வெளியிட்டுள்ளார்.

குறித்த அறிக்கையில், பிறப்புச் சான்றிதழை பெறுவதற்கான புதிய விண்ணப்பப்படிவத்தில் பெற்றோரின் இனம் குறித்த விபரங்கள் இருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

பழைய பிறப்புச் சான்றிதழுக்குப் பதிலாக கடந்த 2019 இல் அறிமுகப்படுத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழில் காணப்படும் ஒரு சில குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு புதிய பிறப்புச் சான்றிதழை தயாரித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பொருந்தக்கூடியதும் மிகவும் பாதுகாப்பான வழிமுறைகள் மற்றும் சர்வதேச தரத்திற்கு அமைகின்ற வகையில் குறித்த பிறப்புச் சான்றிதழ் தயாரிக்கப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள பிறப்புச்சான்றிதழில் உள்ளடகப்பட்டுள்ள. பெற்றோர் விவாகமானவர்களா எனும் விடயம் ஒரு சில சிறுவர்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்தும் விடயமாக காணப்படுவதால் அதனை நீக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### புதிய பிறப்புச் சான்றிதழில் உள்ளடக்கப்பட்டுள்ள புதிய விடயங்கள்

- "பிறப்புச் சான்றிதழ்" என்பதற்கு பதிலாக "தேசிய பிறப்புச் சான்றிதழ்" எனும் பெயரை கொண்டிருக்கும்.
- மும்மொழிகளிலும் அமையும்.
- பிறப்பின்போது வழங்கப்படும் ஆளடையாள இலக்கம் உள்ளடக்கம்.
- மிகப் பாதுகாப்பான கடதாசியில் டிஜிற்றல் முறையில் தயாரிக்கப்படும்.
- உடனடியாக பதிலீட்டும் குறியீடு, குறியீட்டு இலக்கம், நீர்மய அடையாளம் (Watermark), ஒளி உணர்வு ஸ்டிக்கர் (Hologram Sticker) ஆகியன உள்ளடக்கம்.
- பதிவாளர் நாயகத்தின் கையொப்பத்துடன் வழங்கப்படும்.

அத்துடன் பழைய பிறப்புச் சான்றிதழில் கூட இல்லாத விடயமான மதம் தொடர்பான விபரம், தேசிய பிறப்புச் சான்றிதழில் உள்ளடக்கப்படவில்லை எனவும், இனம் என்பதற்கு மேலாக பெற்றோரின் தேசிய இனமும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் இதுவரை மக்கள் மயப்படுத்தப்படவில்லை என்பதோடு, அது தொடர்பான நடவடிக்கைகள் முழுமையடைந்த பின்னர், அதற்கான நடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பதாகவும், பதிவாளர் நாயகம் என்.சீ. விதானகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இனம் மற்றும் சாதி தொடர்பான அனைத்து விடயங்களும் புதிய பிறப்புச் சான்றிதழிலிருந்து நீக்கப்படும் என்றும் புதிதாக பிறக்கும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தில் இலங்கையர் என்ற பொதுவான பெயர் மூலமே பதிவுகள் செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# நாட்டில் மழையுடனான காலநிலை டெங்கு அதிகரிக்கும் அபாயம்

(கொழும்பு)

**நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக நாட்டில் பல பாகங்களில் டெங்கு நோய்த்தாக்கம் அதிகரிக்கும் அபாயம் காணப் படுவதாக சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித் துள்ளது.**

இவ்வருடத்தின் முதலாம் காலாண்டை விட இரண்டாம் காலாண்டில் நோய்த் தொற்று அதிகாரித்திருந்ததாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் பல பாகங்களில் டெங்கு நோய்த் தொற்று அதிகரித்து வருவதைத் தொடர்ந்து நிலவும் மழையுடனான காலநிலையால் நோய்த் தாக்கம் மேலும் அதிகரிக்கக் கூடிய அபாயம் காணப்படுகிறது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, காலி மற்றும் இரத்தின புரி ஆகிய பிரதேசங்கள் அவதானத்திற்குரிய இடங்களாக அடையாளப்படுத் தப்பட்டுள்ளன.

குறித்த பிரதேசங்களில் கடந்த 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை தொடர்ச்சியாக முன்வைக்கப்படவுள்ளன.

முப்படைகள் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் வேலைத்திட்டம் இரு கட்டங்களாக செயற்படுத் தப்பட்டுள்ளன. (ஜ-8)

# ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழைய மீண்டும் தடை

(ஜெனிவா)

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு இலங்கையர்கள் நுழைவதற்கு இரண்டாவது தடவையாகவும் தடை விதிக்கப் பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குள் நுழையக்கூடிய நாடுகளின் பட்டியல் ஒன்று இரண்டாவது முறையாகவும் வெளியிடப்பட்டுள்ளது. எனினும் அந்த நாடுகளின் பட்டியலில் இம்முறையும் இலங்கை இணைத் துக் கொள்ளப்படவில்லை.

கடந்த 30 ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்தினால் வெளியிடப்பட்ட முதலாவது பட்டியலிலும் இலங்கை உள்ளடக்கப் படவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக உலக நாடுகள் தங்கள் விமான நிலையங்களை மூடியிருந்தன. எனினும் தற்போது வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருக்கும் நிலையில் சில நாடுகள் விமான நிலையங்களை திறந்து சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

இந்நிலையில் ஐரோப்பிய நாடுகளுக்குள் வருகை தரக்கூடிய ஏனைய் நாடுகளின் பட்டியலை ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ளது. இந்தப் பட்டியலில் இலங்கை இணைத்துக்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)







## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தனியார் வர்த்தக ஊழியர் சங்கத்தின் வர்த்தக ஊழியர்களின் நலன்சார்ந்த விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல் நாளை 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்.றிம்மர் மண்டபத்தில் (வேம்படி மகளிர் பாடசாலை அருகில்) இடம்பெறும். இதன்போது முன்னாள் தலைவர் வே.தியாகராசா வர்த்தக சங்கத்தின் நடைமுறைகள் தொடர்பாக தெரியப்படுத்துவதுடன் புதிய நிர்வாகத்திடம் சங்கத்தை வைபவ ரீதியாக கையளிக்கும் நிகழ்வும் இடம்பெறும். (5-8)

## நல்லூர் ஆலய வீதிகளில் சிறப்பு சோதனை தீவிர ஏற்பாடுகளில் பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா இன்று ஆரம்பமாகும் நிலையில் கோவிலுக்கு வரும் அடியவர்கள் கட்டாயம் அடையாள அட்டை கொண்டு வர வேண்டும் என யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ அறிவித்துள்ளார்.

ஆலயத்திற்கு வரும் அடியவர்கள் அனைவரும் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறப்புச் சோதனை சாவடியில் அடையாள அட்டையினை காண்பித்த பின்னரே ஆலயத்திற்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

அத்தோடு வெளிநாட்டிலிருந்து வருபவராக இருந்தால் அவர் தனிமைப்படுத்தலுக்குட்பட்டவர் என்ற சான்றிதழை காண்பித்த பின்னரே ஆலயத்திற்கு செல்ல அனுமதிக்கப்படுவார்.

அத்தோடு அடியவர்கள் அனைவரும் முகக்கவசம் அணிய வேண்டும். அத்தோடு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றும் முகமாக கைகளை நன்றாகக் கழுவி உடல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அடையாள அட்டையினை காண்பித்து அவர்களது முகம் கமராவில் பதிவு செய்யப்பட்ட பின்னரே ஆலயத்திற்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்றும் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இம்முறை நல்லூர் உற்சவமானது மிகவும் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட்டு மிகுந்த கட்டுப்பாடுகளுடன் இடம்பெறவுள்ள நிலையில் மக்கள் பெருமளவில் ஆலயத்திற்கு வருவதை தவிர்க்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (4-5)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் உள்ள மும்மொழிக்கற்கை நிலையத்தினால் வவுனியா தெற்கு வலயத்தில் அரச ஊழியர்கள் மற்றும்மாணவர்களுக்கான மூன்று மாதகால அடிப்படை சிங்கள மொழி கற்கை நெறி ஆரம்பமாகவுள்ளது. கற்க விரும்பும் அரச ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலகத்தில் விண்ணப்பங்களைப் பெற்று பதிவுகளை மேற்கொள்ளுமாறு வடமாகாண கல்வித் திணைக்கள மும் மொழிக் கற்கை நெறி நிலையப் பதில் பணிப்பாளர் பி.என். சுதர்ஷன் அறிவித்துள்ளார். (5)

# நல்லூர் ஆலய உற்சவத்தினை தடையின்றி நடத்துவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு வேண்டும்

## யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தினை தடையின்றி நடத்துவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் அறிவித்துள்ளார்.



நல்லூர் ஆலய உற்சவம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நல்லூர் கந்தன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று ஆரம்பமாகிறது.

எனினும் யாழ். மாவட்டம் கொரோனா கட்டுப்பாடு பேணப்பட்டு வரும் நிலையில் இந்த நிலைமையை தொடர வேண்டிய நிலை காணப்படுகின்றது.

நல்லூர் கந்தன் ஆலய திருவிழாவை முன்னிட்டு அதற்குரிய முன்னேற்பாடுகளை யாழ்.மாநகரசபை மற்றும் ஏனைய திணைக்களங்கள் பொலிஸ் இராணுவத்துடன் இணைந்து மேற்கொண்டுள்ளோம்.

எனினும் தற்போதைய சூழ்நிலையில் கொரோனா அச்சம் காரணமாக சில தளர்வுகள் மற்றும் கட்டுப்பாட்டுடன் இந்த நல்லூர் ஆலய உற்சவத்தை நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

ஆலயத்திற்கு உள்ளும் வெளியிலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி மக்கள் ஆலயத்திற்குள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

ஆலயத்துக்கு வரும் பக்தர்கள்,பாதுகாப்பு பிரிவினர் மற்றும் பொலிஸாரின் செயற்பாட்டிற்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

பக்தர்கள் ஆலய உற்சவத்தை நேரலையாக தொலைக்காட்சி வழியாக வீடுகளிலிருந்து பார்க்க முடியும். அதற்கு உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த ஆலய உற்சவத்தின் மூலம் கொரோனாத் தொற்று ஏற்படாமலும் அதனைப் பாதுகாத்து கொள்ள வேண்டிய பொறுப்பு எம் அனைவரையும் சார்ந்ததே.

எனவே இந்த விடயத்தில் பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்றார். (4-5-33)

## மீண்டும் தீவிரமாகும் நுண்கடன் தொல்லை

(நெளுக்குளம்)

வவுனியாவில் நுண்நிதி கடன் வசூலிக்கும் செயற்பாடுகள் மீண்டும் தீவிரம் அடைந்துள்ளதுடன் மாலை 5 மணிக்குப் பின்னர் நுண்நிதி நிறுவனங்களில் கடன் பெற்றுக் கொண்ட பயனாளர்களைக்குறிப்பாக பெண்களின் வீடுகளுக்கு செல்லும் நுண்நிதி நிறுவனப் பணியாளர்கள் அச்சுறுத்தும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தில் நுண்நிதிக் கடன் வசூலிப்புக்களின் போது பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பல்வேறு சிரமங்களையும் அழுத்தங்களையும் மன உளைச்சல்களையும் எதிர்நோக்கி வருவதையடுத்து நுண்நிதி செயற்பாடுகளை மட்டுப்படுத்தும் திட்டம் ஒவ்வொரு பிரதேச செயலகங்கள் ஊடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் மாலை 5 மணிக்கு பின்னர் வீடுகளுக்கு சென்று கடன் வசூலிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் தற்போது இந்நடவடிக்கைகள் வவுனியாவில் பல பகுதிகளில் இடம் பெற்று வருகின்றன. இதனால் மீண்டும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் நெருக்கடி நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

இந்நடவடிக்கையை தடுத்து நிறுத்துமாறு நுண்நிதி நிறுவனங்களில் கடன் பெற்றுக் கொண்ட பயனாளர்கள் கோரி வருகின்றனர்.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் தனியார் நுண்நிதி நிறுவனப் பணியாளர் ஒருவர் வவுனியாவிலுள்ள குறித்த நிதி நிறுவனத்தில் பெற்றுக்கொண்ட கடன் பணத்தை வசூலிப்பதற்கு சென்ற போது தற்போது பணம் இல்லை என்று தெரிவித்த குடும்பப் பெண் ஒருவரை அச்சுறுத்தியுள்ளதாகவும் அதிக வட்டி வீதங்களை கடன் பெற்றுக்கொண்ட பணத்துடன் சேர்த்து கொண்டு பற்றுச் சீட்டுக்களை வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நுண்நிதி நிறுவனங்களின் செயற்பாடுகள் தற்போது அதிகரித்து காணப்படுவதுடன் நுண்நிதி நிறுவனப் பணியாளர்கள் குடும்பப் பெண்களை அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் செயற்பட்டு வருவதாகவும் இந்நடவடிக்கையை தடுத்து நிறுத்தி நிறுவனங்களில் பெற்றுக்கொண்ட கடன் தொகையை அந் நிறுவனங்களுக்கு சென்று செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (5-8-299)

## விவசாயக் கல்லூரி மாணவர்களுக்கு களப்பயிற்சி



யாழ்ப்பாணம்)

யாழ்.விவசாயக் கல்லூரியில் NVQ-5 தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான தென்னைப் பயிர்ச்செய்கை தொடர்பான விரிவாக்கல் நிகழ்வு கடந்த 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தென்னைப் பயிர்ச்செய்கை சபையில் நடைபெற்றது.

இதன்போது தென்னை வகைகள், நாற்று மேடை முகாமைத்துவம், நிலங்களை வளப்படுத்தலும், தென்னை நடுகை முறைகளும், பசளைப் பிரயோக முறைகள் மற்றும் நோய்க்கட்டுப்பாட்டு முறைகளும் பராமரிப்பும் போன்ற விடயங்கள் உள்ளடக்கியதாக களப்பயிற்சி மற்றும் விரிவாக்கல் பயிற்சிகளும் வழங்கப்பட்டன.(4-5-8)

## சட்டவிரோத கட்டடங்கள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குள் பிரதேச சபையின் அனுமதி இன்றி சட்டவிரோதமாக அமைக்கப்படுகின்ற கட்டடங்களைக் கட்டுப்படுத்த மேசன் தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வு ஒன்றினை ஏற்படுத்த பிரதேசசபை தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற பிரதேச சபையின் மாதாந்த அமர்வின் போதே இம்முடிவு எடுக்கப்பட்டது.

இது தொடர்பாக தவிசாளர் க.வாமதேவன் தெரிவிக்கையில், சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குள் பிரதேச சபையின் அனுமதி இன்றி வீடுகள், கடைகள் மற்றும் மதில்கள் உள்ளிட்ட கட்டடங்கள் தொடர்ச்சியாக கட்டப்பட்டு வருகின்றன. இவ்வாறான சட்டவிரோதக் கட்டடங்களைக் கட்டுப்படுத்த பிரதேசத்திலுள்ள மேசன் தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வு ஒன்றினை ஏற்படுத்துவது சிறப்பாக அமையும். கட்டட வேலைகளில் ஈடுபடும் மேசன் தொழிலாளர்களுக்கு இது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் பட்சத்தில் குறித்த தொழிலாளி சபையின் அனுமதியைப் பார்த்து தனது வேலைகளை ஆரம்பிக்க முடியும்.

இதனால் சட்டவிரோதக் கட்டடங்களை ஓரளவிற்கு கட்டுப்படுத்த முடியும் என அவர் தெரிவித்திருந்தார். சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் பல சட்டவிரோதக்கட்டடங்கள் காணப்படுவதாக சபையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சபை உத்தியோகத்தர்கள், சபை உறுப்பினர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் சட்டவிரோதக் கட்டடங்கள் தொடர்பில் கண்காணிக்கின்ற போதிலும் நாளாந்தம் சட்டவிரோதக் கட்டடங்களின் தொகை அதிகரித்துச் செல்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (4-5-30)








# ஆட்டோ-மோ.சைக்கிள் மோதல் ஒருவர் படுகாயமடைந்தார்



(மஸ்கெலியா)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சோழ ங்கந்தை கீழ்ப்பிரிவு நெடுஞ்சாலையில் ஆட்டோ வுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார்.

நேற்று பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆட்டோச் சாரதி படுகாய மடைந்த நிலையில் மஸ்கெ லியா ஆதார வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளதா கவும், ஆட்டோவையும், மோட் டார் சைக்கிளையும் பொலிஸ் நிலையத்தில் வைத்திருப்பதாக வும் மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பண் டார தெரிவித்தார். (ஜ-4)

# குருநாகல் புவனேகபாகு அரசவைக்குள் நுழையத்தடை

(குருநாகல்)

வரலாற்று சிறப்புமிக்க புவனேக்பாகு அரச சபை கட்டடத்தினை பாதுகாக்கவும் அதற்குள் பிரவேசிக்கத்தடை விதிக்கும் கட்டளை ஒன்றை குருநாகலை நீத வான் நீதிமன்றத்தின் ஊடாக சட்டமா அதிபர் பெற்றுக் கொண்டுள்ளார்.

அதனடிப்படையில் குருநாகலை நகர சபை தலைவர் துஷார சஞ்சீவ, நகர சபை உறுப்பினர்கள், நகர சபை ஆணை யாளர், நகர சபையின் பொறியியலாளர், நகர சபை ஊழியர்கள் மற்றும் அவர்க ளின் பிரதிநிதிகள் அரச சபை கட்டடத் தினை பாதுகாக்கவும் அதற்குள் பிரவே சிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த தகவலை சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி நிஷாரா ஜய வர்த்தன தெரிவித்துள்ளார்.

புவனேகபாகு அரச சபை கட்டடம் உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளை விரிவுபடுத்துமாறு சட்டமா அதிபர், பதில் பொலிஸ்மா அதிபருக்கு ஏற்கனவே ஆலோசனை வழங்கியிருந்தார்.

பொலிஸ் மற்றும் தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலை தொடர் ந்து சட்டமா அதிபரினால் குறித்த ஆலோ சனை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பி டத்தக்கது. (ஜ-4)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 2
கி.பா: செவ் 9 இல், உயரம்: 5'6"
தகைமை/தொழில்: லண்டனில் வேலை செய்கின்றார்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/7233

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 1
கி.பா: 23½ செவ் 6இல், உயரம்:5'
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. சொந்த வாகன சாரதி (தனியார்)
எதிர்பார்ப்பு: தகுந்த பெண் வெளிநாடு விரும்பத்தக்கது
தொ.இ: B/7234

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: மூலம் 3
கி.பா: 74 செவ் 3இல், உயரம்: 5'7"
தகைமை/தொழில்: B.Sc, MBA (UK) லண்டனில் வேலை செய்கின்றார்
எதிர்பார்ப்பு: பட்டதாரிப் பெண் வெளிநாடு விரும்பத்தக்கது
தொ.இ: B/7237

பிறப்பு: 1968 இந்து
நட்சத்திரம்: பூராடம் 3
கி.பா:16½ செவ் 12 இல், உயரம்: 5'4"
தகைமை/தொழில்: B.A, MA, அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் தவிர்ந்த ஏனைய இடங்கள் விரும்பத்தக்கது.
தொ.இ: B/7247

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: செவ் 1 இல், உயரம்: 5'
தகைமை/தொழில்: B.Sc in Bussi ness IT Private work
எதிர்பார்ப்பு: தகுந்த வரன்
தொ.இ: G/8587

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 38 செவ் 11இல், உயரம்: 5'3"
தகைமை/தொழில்:க.பொ.த.உ/த.தபாலதிபர்
எதிர்பார்ப்பு: பொறியியலாளர், கணக் காளர், வைத்தியர் போன்ற அரச உத்தி யோகம் பார்க்கும் பட்டதாரி மணமகன்
தொ.இ: G/8589

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: சதயம் 2
கி.பா:11சூரிசெவ்11இல், உயரம்:5'4"
தகைமை/தொழில்: Completed B.Sc. (Mora tuwa) Now Following Master studies in London
எதிர்பார்ப்பு: இலங்கைப் பல்கலைக்கழக பட்டதாரி விரும்பத்தக்கது. Engineer, M.Sc in IT போன்ற உத்தியோகத்தர்.
தொ.இ: G/8592

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 2
கி.பா:34 செவ்10இல் உயரம்: 5'3"
தகைமை/தொழில்: B.A Accounting & Finance Management Assistant
எதிர்பார்ப்பு:. தகுந்த வரன்
தொ.இ: G/8563

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# யாழ். மாவட்டம் வன்முறைகள் இடம்பெறக்கூடிய பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது

## கபே கூறுகிறது

(வவுனியா)

வடக்கில் தேர்தலின்போது வன்முறைகள் இடம்பெறக்கூடிய மாவட்டங்களில் யாழ். மாவட்டம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக 'சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்புத் தெரிவித்துள்ளது.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே கபே அமைப்பின் பணிப்பாளர் அகமட் மனாப் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேர்தல் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் பரிமாறப்பட்டு வருகின்ற இந்த சந்தர்ப்பத்தில் அமைதியான தேர்தலுக்காக ஒன்றுபடுவோம் என்ற நோக்கில் கிராமத்திற்கு கிராமம் என்ற வேலைத்திட்டத்தை நாங்கள் ஆரம்பித்திருக்கின்றோம்.

அந்த வகையில் தேர்தல் பிரசாரம் தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகள் 'கபே' அமைப்பிற்கு கிடைக்கப்பெற்றுள்ளது. ஒரே கட்சியில் போட்டியிடும் அபேட்சகர்களுக்கு எதிராக வெறுப்பூட்டத்தக்கதான பிரசாரங்கள் அதிகரித்துள்ளதுடன் பொய்யான பிரசாரங்களும் அதிகளவில் பரப்பப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. எனவே வெறுப்பூட்டத்தக்க பிரசாரங்கள் அதிகரிக்கும் போது வன்முறைகளும் அதிகரிக்கும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு தெளிவூட்டல்களை நாம் வழங்கியிருக்கிறோம்.

அந்த வகையில் வன்முறைகள் அதிகரித்த சில பகுதிகளை பொலிஸ் திணைக்களத்திற்கு அடையாளப்படுத்தியுள்ளோம். வன்னி மாவட்டத்தில் வவுனியா தொகுதியில் முறைப்பாடுகள் மிகவும் குறைவான நிலையில் காணப்படுகின்றமை பாராட்டத்தக்க விடயமாக இருக்கிறது. மன்னார் மாவட்டத்தில் வெறுப்பூட்டத்தக்க பேச்சுக்கள் மற்றும் பொய்யான பிரசாரங்கள் போன்ற முறைப்பாடுகள் அதிகளவில் கிடைத்துள்ளன.

குறிப்பாக கட்சிகளின் ஆதரவாளர்களே அதிகளவில் வன்முறையில் ஈடுபடுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அரசியல் வாதிகள் ஒன்றாகவே பயணிக்கிறார்கள். அதுபோல ஆதரவாளர்களும் ஒன்றாக பயணிக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

குறிப்பாக பொத்துவில், அக்கரைப்பற்று, சாய்ந்தமருது பிரதேசங்கள் வன்முறைகள் அதிகமாக இடம்பெறும் பகுதியாக எம்மால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் காத்தான்குடி, ஏறாவூர், கிண்ணியா, புல்மோட்டை மற்றும் வடக்கில் யாழ். மாவட்டம் போன்ற பகுதிகள் வன்முறைகள் தொடர்பாக முன்னிலையான இடத்தை பெறுகின்றது. வடகிழக்கிற்கு அப்பால் குருநாகல், மதுகம, தங்கல்ல போன்ற பகுதிகளை நாம் அடையாளப்படுத்தியுள்ளோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் வன்முறையில் ஈடுபடாமல் அமைதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு அனைவரும் ஒன்றுபடுவோம் என்ற அழைப்பை விடுக்கின்றேன்.

முக்கியமாக வாக்களிப்பு தினத்தில் அதன் விகிதாசாரம் அதிகரிக்குமா? என்பது சவாலான விடயம். கொவிட்-19 வைரஸ் தாக்கத்தின் இரண்டாம் அலையே இதற்கான முக்கிய காரணியாக இருக்கிறது.

இம்முறை தபால்மூல வாக்களிப்பானது என்றுமில்லாத வகையில் குறைவடைந்திருக்கின்றது. எனவே வாக்களிப்பு விகிதத்தை அதிகரிப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு பல நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்திருக்கின்றது.

நாட்டைப் பொறுத்தவரை அரசுகள் தமக்கு தேவையான நேரங்களிலேயே தேர்தலை நடத்தும் நிலைமைகள் ஏற்பட்டிருந்தன. அந்த வகையில் கொரோனா வைரஸ் தாக்கம் குறைவடைவதற்கு இன்னும் இரண்டு வருடங்கள் தேவையாக இருக்கும் என்று உலக சுகாதார அமைப்பு எதிர்வுகூறுகின்றது.

எனவே சட்டம் இயற்றும் நாடாளுமன்றம் இல்லாமல் இந்த நாட்டிலே மக்கள் பயணிக்க முடியாது. எனவே தான் அதிகமான நிதியை செலவழித்து வாக்காளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி இந்தத் தேர்தலைத் தேர்தல்கள் ஆணைக்குழு நடத்துகின்றது.

எனவே சவாலுக்கு மத்தியில் இந்தத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் நாட்டு மக்கள் இருக்கின்றார்கள்" எனத் தெரிவித்துள்ளார். (ஜ-4)



மன்னார் கறிற்றாஸ் - வாழ்வுதயத்தின் உதவிக்கரம் பிரிவின் இரத்ததான முகாம் நேற்று முன்தினம் வாழ்வுதய மண்டபத்தில் கறிற்றாஸ்-வாழ்வுதயத்தின் இயக்குநர் அருட்பணி செ.அன்ரன் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. இதில் மன்னார் மறைமாவட்டத்தைச் சார்ந்த குருக்கள், அருட்சகோதரிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (படம்:- மன்னார் செய்தியாளர்)

# இதுவரையான பி.சி.ஆர்.பரிசோதனைகளில் மன்னாரில் எவருக்கும் தொற்றில்லை

## வைத்தியர் த.வினோதன்



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பி.சீ. ஆர்.பரிசோதனைகளின் போது எவருக்கும்கொரோனாத் தொற்று ஏற்படவில்லை என பரிசோதனை முடிவுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் மன்னாரில் மூவருக்கு தொற்று உள்ளதாக மக்கள் மத்தியில் வெளியான தகவல் தவறானது என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தர்மராஜா வினோதன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஏப்ரல் மாத ஆரம்பத்தில் இருந்து இன்று வரையான காலப்பகுதிக்குள் 535 பி.சீ.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறித்த பரிசோதனைகள் அனைத்தும் சமூக பரிசோதனைகளாகவே இடம்பெற்றன.

தொற்று ஏற்பட்டவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள், மீனவர்கள், கடற்படை, பொலிஸார் மற்றும் கொழும்பிற்கு அடிக்கடி சென்று வருபவர்கள் என பல தரப்பட்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கான பி.சீ. ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்கொள்ளப்பட்ட 535 பரிசோதனைகளில் எவருக்கும் தொற்று ஏற்படவில்லை என முடிவுகள் உறுதி செய்துள்ளன.

இந்நிலையில் கடந்த வாரம் இந்தியக் கடல் எல்லையைத் தாண்டிய நான்கு மீனவர்கள் பேசாலை மற்றும் வங்காலைப்பாடு பகுதியில் கடற்படையினரினால் நள்ளிரவில் கைது செய்யப்பட்டு அவர்களின் சொந்த வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(4-5-285)

# 126 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்தனர்



(தருமபுரம்)

கிளிநொச்சி இரணைமடு விமானப்படை முகாமில் தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 126 பேர் நேற்று முன்தினம் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

பஹ்ரான் நாட்டிற்கு தொழில் வாய்ப்புக்காக சென்ற நிலையில் கொரோனா காரணமாக நாட்டிற்கு திரும்ப முடியாத நிலையில் இருந்தவர்களை கடந்த 5 ஆம் திகதி நாட்டிற்கு அழைத்து வரப்பட்டனர். அழைத்து வரப்பட்டவர்களில்126 பேர்கிளிநொச்சி இரணைமடு விமானப்படை முகாமுக்கு தனிமைப்படுத்தலுக்காக கொண்டுவரப்பட்டனர்.

அவ்வாறு கொண்டுவரப்பட்டவர்களே நேற்று முன்தினம் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

பி.சி.ஆர்.பரிசோதனையில் தொற்று இல்லை என்பதை உறுதிப்படுத்தி மருத்துவச்சான்றிதழும் வழங்கப்பட்டது. 126 பேரும் ஆண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (4-5-316)

# நாடு திரும்பியவர்களில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி

(நெளுக்குளம்)

டுபாயிலிருந்து நாடு திரும்பியவர்களை வவுனியா வேலங்குளம் தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக பல்வேறு நாடுகளிலும் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்துவரும் செயற்பாடுகள் அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் டுபாய், அபுதாபியில் சிக்கித்தவித்த இலங்கையர்கள் விசேட விமானங்களின் மூலம் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டனர்.

அந்தவகையில் நாடு திரும்பிய அவர்கள் வவுனியா வேலங்குளம் விமானப்படை முகாமில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அழைத்துவரப்பட்டு தனிமைப் படுத்தப்பட்டனர்.

இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை வேலங்குளம் தனிமைப்படுத்தல் மையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த 40 பேருக்கான பி.சி.ஆர்.பரிசோதனைகள் யாழ்.போதனா வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட்டது.

பரிசோதனை முடிவுகளின் படி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்துத் தொற்றிற்குள்ளானவரை கொரோனாத் தடுப்புச் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டார். (4-5-299)

# கித்துள் மரத்தில் கள் வடிக்கலாம்

## கைது செய்ய வேண்டாமென பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்து

(கொழும்பு)

**கித்துள் மரத்தில் கள் வடிப்பவர்களை கைது செய்வதோ அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவோ வேண்டாம் என பொலிஸ்மா அதிபர் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.**

நேற்று முன்தினம் குறித்த அறிவுறுத்தலை பொலிஸ்மா அதிபர் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் விடுத்துள்ளார். அவர் விடுத்துள்ள அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

சட்டத்திற்கு அமைவாக கித்துள் கள் வடித்தல் மற்றும் அதனூடாக கள் தயாரிப்பதற்கான செயற்பாடுகளை அனுமதிப்பத்திரமின்றி முன்னெடுக்க முடியும் என்றும் அதற்கு எதிராக நடடிக்கை எடுக்க வேண்டாம் என்றும் அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஜ-4)

# அனைத்து அரச ஊழியர்களுக்கும்

## தேர்தல்கள் ஆணையாளர் விடுத்துள்ள எச்சரிக்கை

(கொழும்பு)

எந்தவொரு தொழிற்சங்கத்துடனும் நேரடித் தொடர்பைக் கொண்ட அனைத்து அரச ஊழியர்களும் தேர்தல் காலத்தில் அரசியல் நிகழ்வுகளில் பங்கேற்கக் கூடாது என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அரச ஊழியர்கள் எவரும் அரசியல் உரிமை அல்லது அரசியல் உரிமையற்ற நிலையில் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் ஒன்றுகூடல்கள் போன்றவற்றில் ஈடுபடக்கூடாது என்றும் பல இடங்களில் இருந்தும் அரச ஊழியர்கள் தேர்தல் வேட்பாளர்களுக்காகப் பிரசார நிகழ்வுகளை ஒழுங்குசெய்து கொடுக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளமை குறித்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் இது தொடர்பில் விசாரணைகளும் மேற்கொள்ளப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)






# ஆஸியில் ஈழ அகதி உயிரிழப்பு

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியாவில் அகதி தஞ்சம் கோரி போராடிவந்த இலங்கையைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகங்கள் இவ்விடயம் தொடர்பாக செய்தி வெளியிட்டுள்ளன.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியை சேர்ந்த 36 வயது இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

குறித்த இளைஞர். படகு ஊடாக சட்டரீதியற்ற முறையில் அவுஸ்திரேலியாவுக்கு சென்று, தஞ்சம் கோரி போராடி வந்துள்ளதாகவும் 4 வருடங்கள் பிரிஸ்பேர்னிலும் அதன் பின்னர் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக சிட்னியிலும் வசித்து வந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

மேலும் இவரது, அகதி தஞ்சக்கோரிக்கையை, குடிவரவுத் திணைக்களமும் மீளாய்வு மையமும் நிராகரித்தமையினால் அவர், நீதிமன்றத்தில் இவ்விடயம் தொடர்பாக மனு தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் நவம்பர் மாதமளவில் வெளியாகும் எனக் கூறப்பட்டு வந்த நிலையில், சிட்னி- பிளக்டவுன் (Blacktown) பகுதியில் ரயில்முன் பாய்ந்து உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# இந்திய இளைஞர் உட்பட மூவரின் சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

இந்திய இளைஞர் உட்பட மூன்று பேர் வெவ்வேறு பகுதிகளில் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று முன்தினம் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஆரம்ப கட்ட விசாரணைகளில் இவர்கள் மூவரும் தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும் சந்தேகிக்கப்படுகிறது.

வெலிகந்த பகுதியில் 49 வயதுடைய நபர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ஆரம்ப கட்ட விசாரணைகளில் அவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அதேபோல் நேற்று முன்தினம் மாலை மின்னேரிய பகுதியிலும் உயிரிழந்த நிலையில் 59 வயதுடைய நபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதுடன், கொழும்பு, வெள்ளவத்தை பகுதியில் 25 வயதுடைய இந்திய இளைஞர் ஒருவரும் வீடொன்றில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ஜ-4)

# 391 பேர் கைது

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்புக்களின் போது போதைப் பொருட்களை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 391 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேல் மாகாணத்திற்கு பொறுப்பான பிரதிப்பொலிஸ்மா அதிபர் காரியாலயம் இதனைத் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் காலை 6 மணிமுதல் நேற்று அதிகாலை 5 மணிவரை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் பேலியகொடை, மினுவாங்கொடை, கல்கிஸை மற்றும் களுத்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-8)

# விஜயதாச ஒரு தேசத்துரோகி



## சம்பிக்க சாடல்

(கொழும்பு)

எதிரணியில் இருந்தாலும் பொதுஜன பெரமுனவில் பல ஆதரவாளர்கள் இருப்பதாகவும் விஜயதாச ராஜபக்ஷ போன்ற சந்தர்ப்பவாத தேசத்துரோகிகளுக்கு வாக்களிக்க வேண்டாம் என அவர்களிடம் கேட்டுக்கொள்வதாக ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

விஜயதாச ராஜபக்ஷ என்ற அரசியல்வாதி பற்றி பேசவும் விரும்பவில்லை. நானே நீதியமைச்சர், ராஜபக்ஷவினரை சிறையில் அடைக்க எனக்கு வாக்களியுங்கள் என்று 2015 ஆம் ஆண்டு கூறினார்.

தற்போது அந்த பக்கத்திற்கு சென்று, நான்தான் ராஜபக்ஷவினரை காப்பாற்றினேன். நானே சட்டத்தை வளைத்தேன் என்று கூறி தனக்கு வாக்களிக்குமாறு கோருகிறார்.

விஜயதாச ராஜபக்ஷவுக்கு பட்டப்படிப்புக்கான சான்றிதழ் எங்கிருந்து கிடைத்தது என்று உதய கம்மன்பில கேட்ட கேள்விக்கு இதுவரை விஜயதாச பதிலளிக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# ஒன்றரை இலட்சத்தைக் கடந்தது பி.சி.ஆர்.பரிசோதனைகள்

(கொழும்பு)

நாட்டில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி நேற்று வெள்ளிக்கிழமை இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றினால் இதுவரை இரண்டாயிரத்து 753 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட 665 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன் சந்தேகத்தின் பேரில் 101 பேர் வைத்தியக் கண்காணிப்பிலும் உள்ளனர்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் இதுவரையில் 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# 1921 முதல் இன்று வரை வடமாகாண பாராளுமன்றத் தேர்தல்களும் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும்



13

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

1989ஆம் ஆண்டிலும் தமிழ்க் கட்சிகள் சேர்ந்து போட்டியிட்டாலும் இதனைப் பலமான கூட்டாக மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தியாவினால் சேர்த்து வைக்கப்பட்ட செயற்கையான ஒரு கூட்டாகவே மக்கள் அதனைப் பார்த்தனர். தேர்தல் முடிந்த கையோடு இந்தக் கூட்டில் இருந்த நான்கு கட்சிகளும் பிரிந்து விட்டன.

1977ஆம் ஆண்டு தமிழீழ கோரிக்கையை முன்வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிட்ட போது வடக்கு- கிழக்கில் 18 தொகுதிகளில் வெற்றி பெற்றிருந்தது. அது எழுச்சியுடன் நடைபெற்ற தேர்தலாகும்.

அதன் பின்னர் 1989, 1994, 2000 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் வடக்கு-கிழக்கில் தமிழ் மக்கள் ஆர்வத்துடன் வாக்களிக்கவில்லை. 1977ஆம் ஆண்டின் பின்னர் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து கொள்கை ஒன்றை முன்வைத்து நடந்த தேர்தலாக 2001ஆம் ஆண்டு தேர்தலைப் பார்க்க முடியும்.

கொழும்பில் உள்ள இராஜதந்திர வட்டாரங்களிலும் இத்தேர்தல் முடிவுகள் கவனத்தை ஈர்த்திருந்தன. தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் தலைமையாக கொழும்பில் உள்ள இராஜதந்திர வட்டாரங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஏற்றுக் கொண்டிருந்தன.

இதனைத்தொடர்ந்து டிசெம்பர் 12ஆம் திகதி ( 12.12.2001) அன்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களை அழைத்துப் பேசினார். நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்தசங்கரியும் ஆர்.சம்பந்தனும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபாலகிருணஷ்ண காந்தியை சந்தித்து பேசினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுவின் முதலாவது கூட்டம் டிசெம்பர் 18ஆம் திகதி கொழும்பில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைக்காரியாலயத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவர் வி.ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற குழுத்தலைவராக ஆர்.சம்பந்தன் தெரிவு செய்யப்பட்டார். இந்தக் கூட்டத்தின் இறுதியில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தேர்தல் முடிந்த பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பாக வெளியிடப்பட்டு வரும் உண்மைக்குப் புறம்பான தகவல்களுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. தேர்தல் இந்த நான்கு கட்சிகள் ஒன்றாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றாலும் அவர்களால் ஒற்றுமையாக இயங்க முடியாது என்றும் விரைவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபட்டு தனித்தனியாக இயங்க ஆரம்பித்து விடுவார்கள் என்றும் சில ஆங்கிலப் பத்திரிகைகள் உட்பட கொழும்பு பத்திரிகைகள் விசமத்தனமாக பிரசாரங்களை செய்துவந்தன. இந்தப் பிரசாரங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட விடயங்களில் உறுதியோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படும் என்றும் தமக்குள் எந்தப் பிளவும் கிடையாது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

12ஆவது பாராளுமன்றம் 2001 டிசெம்பர் 19ஆம் திகதி கூடிய போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அக்கட்சியின் பாராளுமன்ற குழுத்தலைவர் ஆர்.சம்பந்தன் முக்கிய சபதம் ஒன்றை எடுத்தார். இந்தப் பாராளுமன்ற தொடர் முடிவடைவதற்குள் தமிழ் மக்கள் மரியாதையுடன் வாழக்கூடிய நிரந்தர தீர்வு கிடைக்கவில்லை என்றால் நாங்கள் அடுத்த பாராளுமன்றத்திற்கு வர மாட்டோம் எனத் தெரிவித்தார்.

### தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தமிழர் விடுதலைக் கூட்டணி வெளியேறல் -2004

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமைக்கும் கொள்கைக்கும் எதிராக செயற்படும் வீ.ஆனந்தசங்கரியை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுவடைந்து வந்தன. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினருக்கும் இடையில் கிளிநொச்சியில் நடைபெற்ற சந்திப்புக்களிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆனந்தசங்கரியின் நிலைப்பாடு தொடர்பாக அதிருப்தி தெரிவித்திருந்தனர். வீ.ஆனந்தசங்கரி மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து அவரைக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்ற தீர்மானங்களை மாவட்ட கிளைகள் எடுத்திருந்தன.

2003 நவம்பர் 30ஆம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக்கூட்டத்தில் ஆனந்தசங்கரிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது. கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை அலுவலகத்தில் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் கூட்டம் நடைபெற்றது. மத்திய செயற்குழுவை சேர்ந்த சுமார் 36 பேர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கலவரம் ஏற்பட்டது. அது கைகலப்பாக மாறியது.

நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் மற்றும் யாழ். மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி அமைப்பாளர் ரி.குலசிங்கம் உட்பட சிலர் மீது ஆனந்தசங்கரிக்கு ஆதரவாக இருந்தவர்கள் தாக்குதல் நடத்தினர். கலவரங்களுடன் கூட்டம் முடிவடைந்தது. தமிழ் மக்களின் தனிப்பெரும் கட்சியாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் ஏற்பட்ட பாரிய பிளவாக இது கருதப்பட்டது. 1972ஆம் ஆண்டு தமிழரசுக்கட்சி தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி தலைவர் எஸ்.தொண்டமான் உட்பட தமிழ் அரசியல் கட்சிகள் இணைந்து உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி 1977ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஈழத்தமிழ் மக்களின் தனிப்பெரும் கட்சியாக மக்கள் அங்கீகாரம் வழங்கியிருந்தனர். அதன் பின்னர் பல இயக்கங்கள் உருவாகி அவை அரசியல் கட்சிகளாக பதிவு செய்த போதிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியே தமிழ் மக்களால் அங்கீகாரம் பெற்ற கட்சியாக தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்சியாக திகழ்ந்தது.

எம்.சிவசிதம்பரம் தலைவராக இருக்கும் வரை இத்தகைய குழப்பங்கள் ஏற்படவில்லை. ஆனால் எம்.சிவசிதம்பரம் காலமானதைத் தொடர்ந்து தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஆனந்த சங்கரியின் போக்கில் தமிழ் மக்கள் மட்டுமன்றி தமிழர் விடுதலைக் கூட்டணியின் அங்கத்தவர்களே அதிருப்தி அடைந்திருந்தனர். இதன் விளைவாகவே நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

இதனையடுத்து புதிய தலைவரை தெரிவு செய்வதற்கான மத்திய செயற்குழுக்கூட்டம் டிசெம்பர் 21ஆம் திகதி அம்பாறை திருக்கோவிலில் நடைபெறும் எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் ஆர்.சம்பந்தன் மத்தியகுழு உறுப்பினர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்தார். இதனை அறிந்த வீ.ஆனந்தசங்கரி கொழும்பு நீதிமன்றில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டத்திற்கு தடைவிதிக்க வேண்டும் எனக் கோரி மனு ஒன்றை தாக்கல் செய்தார். தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் ஆர்.சம்பந்தன், சிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் கட்சியை தவறாக வழிநடத்துவதாகவும் தலைவரான தனது அனுமதி இல்லாமல் மத்திய செயற்குழு கூட்டத்தை பொத்துவிலில் நடத்துவதென அறிவித்திருக்கிறார்கள் என்றும் அந்த மனுவில் தெரிவித்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம் டிசெம்பர் 31ஆம் திகதி வரை மத்திய செயற்குழுக் கூட்டத்திற்கு இடைக்கால தடைவிதிப்பதாக டிசெம்பர் 17ஆம் திகதி அறிவித்திருந்தது.

இந்த மனுமீதான விசாரணையை மீண்டும் டிசம்பர் 27ஆம் திகதி விசாரணைக்கு எடுத்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மற்றொரு உத்தரவை பிறப்பித்தது. கட்சியின் தலைவர் ஆனந்தசங்கரியின் அனுமதி இன்றி மத்திய செயற்குழுக் கூட்டத்தை கூட்ட முடியாது என்றும் அம்பாறை பொத்துவிலிலோ அல்லது வேறு இடத்திலோ கூட்டத்தை நடத்தக்கூடாது என்றும் உத்தரவிட்டது. இந்த உத்தரவை தமிழ் பத்திரிகையான தினகரன், ஆங்கிலப்பத்திரிகையான டெய்லி நியூஸ், சிங்கள பத்திரிகையான தினமின ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்க வேண்டும் என்றும் நீதிமன்ற பதிவாளருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரியின் அனுமதியின்றி கூட்டங்களை நடத்தக் கூடாது என்றும் அவருக்கு தெரியாமல் தீர்மானங்களை எடுக்கக்கூடாது என்றும் கொழும்பு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தால் தமிழர் விடுதலைக் கூட்டணி பெரும் நெருக்கடிக்குள் சிக்கியிருந்தது. இந்நீதிமன்ற உத்தரவு ஆனந்தசங்கரிக்கு பெரும் சாதகமாகவே இருந்தது. நெருக்கடியான சூழலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுக் கூட்டம் பெப்ரவரி முதலாம் திகதி நடைபெறும் என அறி விக்கப்பட்டிருந்தது. மறுநாள் பெப்ரவரி முதலாம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கட்சியின் கொழும்பு அலுவலகத்தில் ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தை முன்னிட்டு பெருந்தொகையான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

பாராளுமன்றம் கலைக்கப்படலாம் எதிர்பார்க்கப்பட்ட சூழலில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை தெரிவு செய்வதற்காக 7பேர் கொண்ட குழு இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது. இக்குழுவில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி, செயலாளர் ஆர்.சம்பந்தன், சிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கம் உட்பட பொருளாளர் மற்றும் அம்பாறை வவுனியா மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் இதில் உள்ளடக்கப்பட்டனர். ஆனந்தசங்கரி வேட்பாளர்களை தெரிவு செய்யும் குழுவின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

எதிர்பார்க்கப்பட்டது போல ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஐக்கிய தேசியக்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான 12 ஆவது பாராளுமன்றத்தை பெப்ரவரி 7ஆம் திகதி நள்ளிரவு கலைத்தார். பாராளுமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து பாராளுமன்ற பொதுத்தேர்தல் ஏப்ரல் 2ஆம் திகதி நடைபெறும் என ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய தேர்தல் ஆணையாளர் அறிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் மோதல்கள் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் பொதுத்தேர்தலை எதிர்கொள்வது சம்பந்தமாக கூட்டம் ஒன்றை பெப்ரவரி 9ஆம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்பு அலுவலகத்தில் நடத்தினர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியின் அனுமதியின்றி அவருக்கு தெரியாமல் கட்சி எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக்கூடாது என கொழும்பு நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கும் நிலையில் அக்கட்சியின் சின்னமான உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட முடியுமா? என்ற கேள்வியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் மத்தியில் எழுந்தது.

(தொடரும்...)

# இரத்த ஆறு ஓடும் என பௌத்த துறவிகள் அச்சுறுத்துவது

# மீண்டும் தாக்குதல்கள் அரங்கேறலாம் என்பதை காட்டுகின்றன

## விக்னேஸ்வரன் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை தீவின் வரலாற்றில் தமிழர்களின் செங்குருதிக் கறை படிந்த நாட்களில் 1983 ஜூலை 23 ஆம் நாள் முக்கியமானது. புத்தரின் போதனைகளைக் கடைப்பிடிப்பவர்கள் என்று கூறிக்கொள்வோர் அன்று தென்னிலங்கையில் ஒருகையில் வாக்காளர் பட்டியலையும் மறுகையில் கத்திகள், கோடரிகள், வாள்கள் என்பவற்றுடன் வீடு வீடாகச் சென்று தமிழர்களை வெட்டியும் எரித்தும் கொன்றொழித்த நாள் இதுவாகும் என முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான நீதியரசர் விக்னேஸ்வரன் கறுப்பு ஜூலை தினத்தை முன்னிட்டு ஊடகங்களுக்கு அனுப்பிய செய்திக் குறிப்பில் இதனைத் தெரிவித்தார். ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழர்களின் உடைமைகளைத் தீயிட்டும் சூறையாடியும் சிங்கள பௌத்த பேரினவாதம் தாண்டவமாட வழிவிடப்பட்ட நாள். விடுதலை வீரன் குட்டிமணி தனக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டால் தனது கண்களைத் தானம் அளிக்கும்படியும் அப்போது மலரப் போகும் தமிழீழத்தைத் தனது கண்கள் காணும் என்று கூறியதற்காக வெலிக்கடைச் சிறைச்சாலையில் சிங்களக்காடையர்களால் அவரின் கண்கள் பிடுங்கப்பட்ட நாள்.

குட்டிமணியுடன் தங்கதுரை உட்பட சிறையிலிருந்த 53 அரசியல் கைதிகள் கொடூரமாகக் கொன்றொழிக்கப்பட்ட நாள். தமிழ் மக்களுக்கெதிராக நிறுவனப்படுத்தப்பட்ட தொடர் இனக் கலவரங்களான 1956, 1958, 1977, 1981 வன்முறைகளின் உச்சக்கட்டமாக இன அழிப்பு நடைபெற்ற ஏழு நாட்களின் தொடக்கநாள்.

1983 ஆம் ஆண்டு ஜூலைக் கலவரத்தில் வன்முறைகளில் சுமார் 3000 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர். பல்லாயிரக்கணக்கானவர்கள் அகதிகளாக்கப்பட்டனர். தெற்கில் எஞ்சியிருந்த தமிழர்கள் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்துக்கு விரட்டப்பட்டார்கள்.

நான் அப்போது மல்லாகம் மாவட்ட நீதிபதியாகவும் நீதவானாகவும் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். அப்போது மானிப்பாய் போன்ற இடங்கள் ஊடாக இராணுவ வாகனங்களில் வந்தோர் வீதியில் கண்ட மக்களை வகை தொகையில்லாமல் சுட்டுச் சென்றது சம்பந்தமாக மரண விசாரணைகள் நடத்த எவரும் முன்வராத நிலையில் நான் நடத்தியமை இப்போதும் மனதில் ஆழப்பதிந்திருக்கின்றன. அவ்வாறு நடத்தியதால் ஜனாதிபதி ஜே.ஆரின் சகோதரரான ஜனாதிபதி சட்டத்தரணி எச். டபிள்யூ. ஜயவர்தனவின் கோபத்திற்கு ஆளானேன்.

இந்த உச்சக்கட்ட மிலேச்சத்தனமான அடக்குமுறைதான் எமது இளைஞர்களை முழு அளவிலான ஆயுதப்போராட்டத்துக்கு நிர்ப்பந்தித்து வடக்கு-கிழக்கில் ஒரு நிழல் அரசை உருவாக்குவதற்கு வழிகோலியது. பல்லாயிரக்கணக்கான எமது மக்களை இனப்படுகொலைக்கு உட்படுத்தி இந்த நிழல் அரசும் 2009 ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.


இவை எல்லாமே சிங்கள பௌத்த பேரினவாத மேலாண்மையை நாடு முழுவதும் நிலைநிறுத்துவதற்காக தொடர்ந்து வந்து அரசாங்கங்களால் காலம் காலமாக நன்கு திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட இனப்படுகொலை நிகழ்வுகளாகும்.

இதனை வடமாகாண சபையின் ஊடாக எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒரு இனவழிப்பு ஆவணமாக உருவாக்கி சர்வதேச விசாரணைக்கான எமது போராட்டத்தைப் பலப்படுத்தியுள்ளேன்.

இன்று நிலவும் சூழ்நிலையும் 1983 இல் இருந்த சூழ்நிலையும் ஒரே விதமாகவே காணப்படுகின்றன. 1978 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி முறையூடாக சிங்கள பௌத்த பேரினவாதம் திரட்சி பெற்று காணப்பட்டமையே அன்றைய இனக்கலவரத்துக்கு வழிகோலியது. அதேபோல, இன்றும் அதே நிறைவேற்று ஜனாதிபதி தெரிவுக்காக கடந்த வருடம் நடைபெற்ற தேர்தலின் ஊடாக சிங்கள பௌத்த பேரினவாதம் மீண்டும் திரட்சி பெற்றுக் காணப்படுகின்றது.

சிங்கள பௌத்த துறவிகள் எதற்கெடுத்தாலும் இரத்த ஆறு ஓடும் என்று அச்சுறுத்துவது மீண்டும் எம்மீதோ அல்லது எமது முஸ்லிம் சகோதரர்களின் மீதோ எவ்வேளையும் ஒரு தாக்குதல் நடைபெறலாம் என்பதையே கட்டியம் கூறி நிற்கின்றது.

இலங்கை அரசுடன் பேசுவதாலோ அல்லது இலங்கைக்குள் பேசுவதாலோ எமக்கான உரிமையை நாம் என்றுமே பெற்றுவிட முடியாது என்பதையே வரலாறு எமக்கு இடித்துரைக்கின்றது. எமது மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைக்கான சர்வதேச விசாரணை ஒன்றின் மூலமான பரிகார நீதிக்கூடாகவே எமது உரிமைகளை நாம் அடைய முடியும். இதற்கு நேர்மை,



விலைபோகாத் தலைமை, அர்ப்பணிப்பு ஆகியவற்றுடன் நிறுவன ரீதியான செயற்பாடுகளே அவசியமாக இருக்கின்றன.

இதற்கான ஒரு அடித்தளத்தை இடுவது எமது எதிர்கால அரசியல் செயற்பாடுகளில் முக்கியமானதாக இருக்கும். இதற்கான முழுமையான ஒத்துழைப்பை நிலத்திலும் புலத்திலும் உள்ள மக்களிடம் நாம் வேண்டுகின்றோம்.

இன்றைய இந்த நாளில் 1983 ஆம் ஆண்டு கலவரத்தில் படுகொலை செய்யப்பட்ட அனைத்து மக்களுக்கும் எமது அஞ்சலிகளைச் செலுத்துவதுடன் எமது எதிர்கால சந்ததியினர் வளமான, பாதுகாப்பான வடக்கு -கிழக்கு தமிழர் தாயகத்தில் தம்மைத் தாமே ஆளும் உரிமைகளுடன் வாழ வழி செய்யும் வகையில் அர்ப்பணிப்புடன் செயலாற்றுமாறு அவ் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ஜ-2)

# கொவிட்-19 சமூக பாதுகாப்பு நிதிய வைப்பு மீதி ஆயிரத்து 511 மில்லியனாக அதிகரிப்பு

(கொழும்பு)

தனிப்பட்ட, நிறுவன அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புகளுடன் 'இடுகம' கொவிட் - 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி ஆயிரத்து 511 மில்லியனாக அதிகரித்துள்ளது.

சப்ரகமுவ மாகாண சபையின் அரச ஊழியர்கள் ஒரு கோடியே 75 இலட்சத்து 4 ஆயிரத்து 709 ரூபாய் 35 சதத்தையும் நிதியத்திற்கு அன்பளிப்புச் செய்தனர்.

குறித்த அன்பளிப்பு சப்ரகமுவ மாகாண சபையின் ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

டபிள்யூ. ஏ. உபாலி பிரேமதிலக்க ஒரு இலட்சம் ரூபாவையும் திருமதி ஜே. லலிதா ரொபின்ஷன் 10 ஆயிரம் ரூபாவையும் ஹொனஸ் பிரதர்ஸ் மற்றும் லலந்த 5 ஆயிரம் ரூபாவையும் திருமதி. கனத்தேகெதர எலிசா 10 ஆயிரம் ரூபாவையும் பி.எம். ரத்னநாயக்க 10 ஆயிரம் ரூபாவையும் டி.எல். பிரேமரத்ன 5 ஆயிரம் ரூபாவையும் கே.சி. எஸ்.கே. பிரேமலால் 500 ரூபாவையும் கே.ஆர். தனுஜ தீக்ஷன ஆயிரத்து 500 ரூபாவையும் கேகாலை மாவட்ட சாசனாரக்ஷக்க சபை 6 இலட்சத்து 87 ஆயிரத்து 500 ரூபாவையும் மற்றும் மாவனல்ல தேரர் நிர்வாகக்குழு மற்றும் மாவனல்ல சாசனாரக்ஷக்க நிர்வாகக்குழுவும் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவையும் இந்நிதியத்திற்கு வழங்கியுள்ளதுடன், குறித்த அன்பளிப்புகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

ரஷ்யாவின் **Kurusk** மருத்துவக் கல்லூரி மருத்துவ மாணவர்களின் பெற்றோர் ஒரு இலட்சத்து 15 ஆயிரம் ரூபாவையும் மத்திய மாகாண சபையின் செயலாளர் உட்பட அலுவலக ஊழியர்கள் 44 ஆயிரத்து 500 ரூபாவையும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிலையம் ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 899 ரூபாய் 82 சதத்தையும் பொறியியலாளர் எல். டபிள்யூ. டி. தனன்சூரிய ஒரு இலட்சம் ரூபாவையும் மற்றும் இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் 96 ஆயிரத்து 696 ரூபாய் 4 சதத்தையும் இந்நிதியத்திற்கு வழங்கியுள்ளனர். தற்போது இடுகம கொவிட்-19 சுகாதார, பாதுகாப்பு நிதியத்தின் மீதி ஆயிரத்து 511 மில்லியன் ரூபாவாகும். (ஜ-4)


## வைத்தியம்

குழந்தைகள், சிறுவர்களுக்கு ஏற்படுகின்ற நோய்கள், வாத ரோகங்கள், பெண்களுக்கு ஏற்படுகின்ற நோய்கள், சிறுநீர் சம்பந்தமான நோய்கள், இருதய சம்பந்தமான நோய்கள், சுவாச நோய்கள், பாலியல் பலவீனம், தோல் வியாதிகள், வயிறு சம்பந்தமான நோய்கள், நரம்புத் தளர்ச்சி, வாய், பல் வியாதிகள், மனநோய், வலிப்பு நோய், வயோதிபத்தால் ஏற்படுகின்ற நோய்கள், நாட்பட்ட மாறாத புண்கள் போன்றவற்றிற்கு ஆலோசனையும் சிகிச்சையளிக்கக் கூடிய நோய்களுக்கு சிகிச்சையும் வழங்கப்படும்.

**DR.M.T.கமலசிங்கம் (MD/SRILANKA)**
**பரம்பரை மருத்துவரும் பட்டதாரியுமாவார்.**
**கைதடி சென்றல் வைத்தியசாலை, கைதடி வடக்கு.**
**சென்றல் வைத்தியசாலை, யாழ்.வீதி, உடுப்பிட்டி.**
**0771847230**

**குறிப்பு:- கைதடி சமாதான நீதவான் கௌரிதாசன் இல்லத்துக்கு அருகாமையில்.**

(3384)


# தமிழ் மக்களின் தேவைகளுள் இன்னும் எத்தனையோ நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது

## டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு கிடைத்த அரசியல் அதிகாரங்களின் ஊடாக எத்தனையோ மக்கள் நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதிலும் அவற்றுக்காக தன்னால் திருப்தியடைய முடியவில்லை என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமிழ் மக்களின் தேவைகளுடன் ஒப்பிடுகின்ற போது இன்னும் எத்தனையோ விடயங்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருப்பதாகவும் தெரிவித்தார்.

பருத்தித்துறை கொட்டடிப் பிரதேசத்தில் மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் தீர்வு காணப்படும் எனவும் குறிப்பாக தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகள் அனைத்தும் தடை செய்யப்பட வேண்டும் என்றும் தெரிவித்த அமைச்சர் அனைத்து கடற்றொழிலாளர்களும் தங்களுக்கு பொருத்தமான தொழில் முறைகளை ஏனையவர்களுக்கு பாதிப்பின்றி மேற்கொள்ள வேண்டும் என்பதே தன்னுடைய எதிர்பார்ப்பு எனவும் தெரிவித்தார். (ஜ-2)

# வெளிநாடுகளிலிருந்து 43 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து ஒரு குழுவினர் நேற்று அதிகாலை நாட்டை வந்தடைந்தள்ளதாக கொவிட்-19 பரவலை தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

கட்டார் நாட்டின் டோஹா நகரிலிருந்து 13 பேரும் இந்தியாவின் சென்னையிலிருந்து 30 பேரும் இவ்வாறு வருகை தந்துள்ளனர்.

இவ்வாறு வருகை தந்த அனைவரையும் முப்படையினரால் நடத்தப்படும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# கொரோனா தடுப்பூசி பயன்பாடு அடுத்த ஆண்டே எதிர்பார்க்கலாம்

## உலக சுகாதார அமைப்பு

(ஜெனீவா)

கொரோனா தடுப்பூசி பயன்பாட்டை அடுத்த ஆண்டில் மட்டுமே எதிர்பார்க்க முடியும் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. உலகையே உலுக்கி வரும் கொரோனா வைரஸிற்கு தடுப்பூசி கண்டுபிடிக்கும் முயற்சியில் பல்வேறு நாடுகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

அடுத்த ஆண்டின் தொடக்கம் வரையில் கொரோனா வைரஸிற்கு தடுப்பூசியை எதிர்பார்க்க வேண்டாம் என, உலக சுகாதார அமைப்பு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பேசிய அந்த அமைப்பின் அவசர காலத் திட்டத்தின் தலைவர் மைக் ரியான், நோய்த்தொற்றிற்கு எதிரான தடுப்பூசியை தயாரிப்பதில் ஆராய்ச்சியாளர்கள் நல்ல முன்னேற்றம் அடைந்து இருப்பதாகவும், ஆனால் அவற்றின் பயன்பாட்டை அடுத்த ஆண்டில் மட்டுமே எதிர்பார்க்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

பொருளாதாரத்தைச் சார்ந்து இல்லாமல் தேவையை பொறுத்து தடுப்பூசி விநியோகத்தை






உறுதி செய்ய செயற்பட்டு வருவதாகவும், தடுப்பூசி கிடைக்கும் வரையில் நோய்த்தொற்று பரவலை கட்டுப்படுத்துவது அவசியம் எனவும் குறிப்பிட்டுள்ளார். (2)

## இராணுவத் தாக்குதலில் பொதுமக்கள் உட்பட 45 பேர் பலி



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் இராணுவம் நடத்திய வான்வெளி தாக்குதலில் 8 பொதுமக்கள் உட்பட 45 பேர் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானின் சில பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள தலிபான் பயங்கரவாதிகளுக்கும் அரசுப் படைகளுக்கும் இடையே பல ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது.

இந்த உள்நாட்டு போரில் ஆப்கானிஸ்தான் அரசுக்கு அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் ஆதரவு அளித்து வருகின்றன.

இந்நிலையில், அந்நாட்டின் ஹீம் சியார்ட் பகுதியில் தலிபான் பயங்கரவாதிகள் பலர் பதுங்கி இருப்பதாக பாதுகாப்பு படையினருக்கு இரகசியத்தகவல் கிடைத்தது.

இதையடுத்து, கடந்த புதன்கிழமை அப்பகுதியில் ஆப்கான் விமானப்படையினர் அதிரடி வான்வெளி தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 37 தலிபான் பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். ஆனால் பொதுமக்களில் 8 பேர் உயிரிழந்துள்ளதாகவும், பலர் படுகாயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (2)

## இஸ்ரேல் பிரதமருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் - 55 பேர் கைது



(ஜெருசலேம்)

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிராக மத்திய ஜெருசலேமில் ஆயிரக்கணக்கானோர் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

போராட்டத்தைத் தொடர்ந்து மோதல்களும், வன்முறைச் சம்பவங்களும் வெடித்தமையினால் இஸ்ரேலிய பொலிஸார், போராட்டக்காரர்களை கலைக்க தண்ணீர் பீரங்கி தாக்குதல்களை பயன்படுத்தியுமுள்ளதுடன் 55 பேரை கைது செய்தும் உள்ளனர்.

பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டு விசாரணை, கொரோனாத் தொற்றுக்கு எதிரான அரசாங்கத்தின் மோசமான கையாளுதல் முறைகளை சுட்டிக்காட்டியே, நெதன்யாகுவை பதவியலிருந்து இராஜினாமா செய்யுமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர். (2)

## அமெரிக்காவிலுள்ள சீன தூதரகத்தை மூடுமாறு அமெரிக்காவிற்கு சீனா உத்தரவு

### இரு நாட்டு உறவுகளிலும் மேலும் விரிசல்

(பீஜிங்)

சீனாவின் வெளியுறவு அமைச்சகம் செங்டு நகரில் அமைந்துள்ள தனது துணைத் தூதரகத்தை மூடுமாறு அமெரிக்காவிற்கு சீனா உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்காவின் ஹூஸ்டனில் உள்ள சீனாவின் துணைத் தூதரகத்தை மூட வேண்டும் என்ற வோஷிங்டனின் முடிவுக்கு பதிலடியாக பீஜிங் இந்த நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த புதன்கிழமை வெள்ளை மாளிகையின் செய்தி மாநாட்டில் ட்ரம்ப், ஹூஸ்டனில் உள்ள தூதரகத்தை மூடுவதற்கு பீஜிங்கிற்கு 72 மணிநேர அவகாசம் அளித்திருந்தார்.

இந்நிலையில் சீனாவின் இந்த பதிலடியானது இரு நாட்டு உறவுகளில் மேலும் விரிசலை ஏற்படுத்தியுள்ளது. (2)

## மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ள பொலிவியா ஜனாதிபதித்தேர்தல்

(சுக்ரே)

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக பொலிவியாவில் நடைபெற இருந்த ஜனாதிபதித் தேர்தல் 2 ஆவது முறையாக மீண்டும் தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

தென் அமெரிக்க நாடான பொலிவியாவில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் நடைபெற்றது. இதில் எவோ மாரல்ஸ் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆனால் வாக்கு எண்ணிக்கையில் முறைகேடு நடந்ததாக கூறி எவோ மாரல்சுக்கு எதிராக நாடு முழுவதும் போராட்டம் வெடித்தது.

போராட்டத்தில் பொதுமக்களுடன் இராணுவமும் கலந்து கொண்டதால் மாரல்சுக்கு நெருக்கடி ஏற்பட்டது. இதனால் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அவர் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

மேலும் அவர் தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாக கூறி பொலிவியாவில் இருந்து வெளியேறி மெக்சிக்கோவில் தஞ்சம் அடைந்தார். அதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்த பெண் எம்.பி. ஜீனைன் அனெஸ் தன்னைத்தானே இடைக்கால ஜனாதிபதியாக அறிவித்துக் கொண்டார்.

அந்த நாட்டு நாடாளுமன்றத்தில், ஓகஸ்ட் 2 ஆம் திகதிக்கு முன்னதாக பொதுத்தேர்தலை நடத்தி முடிக்க மசோதா நிறைவேற்றப்பட்டது. ஆனால் மசோதாவுக்கு ஜீனைன் அனெஸ் ஒப்புதல் அளிக்க மறுத்துவிட்டார்.

ஆனால் பொலிவியாவில் தற்போது கொரோனா வைரஸ் தீவிரமடைந்து வருவதால் ஜனாதிபதித் தேர்தல் 2 ஆவது முறையாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## காய்கறி வண்டியில் இருந்த குண்டு வெடிப்பு-16 பேர் படுகாயம்

(கைபர் பக்துன்குவா)


பாகிஸ்தானில் காய்கறி வண்டியில் வைத்திருந்த சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் 16 பேர் படுகாயமடைந்தனர்.

உலக நாடுகளில் அதிகரித்து வரும் கொரோனா பாதிப்புகள் பாகிஸ்தானையும் விட்டு வைக்கவில்லை. இதனை தடுக்க அந்நாட்டில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு பின்பு நீக்கப்பட்டது. தொடர்ந்து பாதிப்பு உயர தொடங்கிய நிலையில், குறிப்பிட்ட பகுதிகளில் ஊரடங்கு அமுலானது.

எனினும், அந்நாட்டில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 2 லட்சத்து 67 ஆயிரத்து 400 ஆக உயர்ந்து உள்ளது. இது ஒருபுறம் இருக்க, பாகிஸ்தானில் பயங்கரவாத தாக்குதல்களும் நடந்து வருகின்றன.

பாகிஸ்தானின் கைபர் பக்துன்குவா மாகாணத்தில் பராசினார் பகுதியில் தூரி பஜாரில் காய்கறி வண்டியில் வைக்கப்பட்டிருந்த குண்டு திடீரென வெடித்ததில் 16 பேர் படுகாயமடைந்தனர். இதுபற்றி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (2)

# நல்லைக் கந்தனுக்கு இன்று கொடியேற்றப் பெருவிழா



சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லைக் கந்தனின் சர்வாரி வருடத்துக்குரிய கொடியேற்றப் பெருவிழா இன்று 25.07. 2020 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பக்திபூர்வமாக நடைபெறுகின்றது.

தமிழ்த் தெய்வமாம் முருகனுக்கு தமிழ் மக்கள் வதியும் இடமெல்லாம் கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன. முருகனுக்கும் தமிழருக் கும் இடையிலுள்ள தொடர்பு வரலாற்றுக்கும் அப்பாற்பட்டது எனலாம்.

எமது ஈழமணித் திருநாட்டில் கருணைக் கடலாகிய முருகன் கதிர்காமத்திலும், மாவிட்டபுரத்திலும், செல்வச்சந்நிதியிலும், கந்தபவனக் கடவையிலும், மண்டூரிலும், சித்தாண்டியிலும், வெருகலிலும், நல்லூர் முதலிய தலங்களிலும் கோயில் கொண்டிருக்கிறான்.

யாழ்ப்பாணத்தில்நல்லஊராக சைவ அனுட்டானங்களுக்கெல்லாம் ஒரு குன்றமாக விளங்குவது நல்லைப்பதி எனலாம்.

**கொடிச்சீலை**

நல்லூரிலுள்ளசெங்குந்தமரபினர் வருடா வருடம் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் நடைபெறும் கொடியேற்ற விழாவுக்கான கொடிச்சீலையை அழகிய தேரில் வைத்து ஊர்வலமாக எடுத்துவந்து கொடுக்கும் மரபுண்டு.

**மகோற்சவ சிறப்பு**

கொடியேற்றமானது ஆடி அமாவாசையிலிருந்து ஆறாவது நாள் ஆரம்பிக்கின்றது. தொடர்ந்து இருபத்தைந்து நாட்கள் மகோற்சவங்கள் மிக விமர்சையாக நடைபெறும்.

பத்தாம் நாள் மஞ்சத்திருவிழாவும் பதினோழாவது திருவிழா கார்த்திகை உற்சவமும் பத்தொன்பதாவது திருவிழா கைலாச வாகனத் திருவிழாவும், இருபத்திரெண்டாவது திருவிழா தெண்டாயுத பாணி உற்சவமும் (மாம்பழத் திருவிழா) இருபத்து மூன்றாவது திருவிழா சப்பறத் திருவிழாவும் இருபத்தி நான்காம் நாள் திருவிழா தேர்த்திருவிழாவும், இருபதைந்தாம் நாள் திருவிழா தீர்த்தத் திருவிழாவும் இருபத்தாறாவது நாள் பூங்காவனத் திருவிழாவும் விசேடமாக நடைபெறும். இந்தத்திருவிழாக்காலங்களில் பூலோக கைலாசமாக நல்லூர் காட்சியளிக்கும்.

நல்லூர் கந்தசுவாமி கோயிலில் திருவிழா ஆரம்பித்து விட்டால் அதன் அதிர்ச்சி யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல உலகம் முழுவதிலும் காணப்படுகிறது. எந்த மயமும் கந்த மயமாகவே காட்சியளிக்கிறது.

எல்லா ஊர்களிலும் சிறந்த நல்லூரில் எழுந்தருளிய கந்தவேளின் மகோற்சவங்கள் நடைபெறும் இருப்பதைந்து தினங்களும் தினந்தோறும் விரதம் அனுட்டித்து திருக்கோயிலுக்குச் சென்றுவலம் வந்து திருவிழாவில் பங்குபற்ற முருகன் அருள்பெற்று வீடு திரும்பும் பக்தர்களின் தொகை அளவிட முடியாது.

முருகனே மாயோன் மருகனே! ஒருகை முகன் தம்பியே உள் திருச் சந்நிதியில் வந்து நின்றாலே பெரியார், சிறியார், இளைஞர் , முதியவர், கற்றவர், கல்லார், வறியவர், செல்வர், நல்லோர், தீயார், அதிகாரி, அடிமை என்ற பேதம் ஒழிந்து யாவரும் முருகன் அடியார் என்ற உணர்ச்சி ஊற்றெடுக்கத் தம்மை மறந்து காதலாகித் கசிந்து கண்ணீர் மல்கித் துதிக்கின்றனர்.

அவனருளாலே அவன் தாள் வணங்கு என்றால் போல அவன். அருளுக்கு பாத்திரமாகி வந்த வினையும் வருகின்ற வினையும் கந்தன் என்று சொல்லக் கலங்குமே என்பதை நல்லூரிலே கூடும் அடியவர்கள் நன்கு அறிவார்கள்.

எங்கு பார்த்தாலும் முருகப் பெருமானைப் போற்றும் நினைவு முதிர்ச்சியால் அனைத்திலும் முருகனின் பாடல்களே ஒலிக்கின்றன. அவன் துணை தான் நமக்கு எதனையும் தர வல்லது என்ற ஒரு பெரும் நம்பிக்கையில் நாளும் அவனை வழிபட்டு வாழ்கின்றார்கள்.

**செந்நாப்புலவர்
மதுரகவி.காரை.
எம்.பி.அருளானந்தன்.**

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் சம்பிரதாயப்பூர்வமாக கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை எடுத்து வரும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்திற்கான கொடிச்சீலை சம்பிரதாய பூர்வமாக ஆலயத்தில் ஒப்படைக்கப்படுவது பாரம்பரிய வழக்கமாகும்.

அதன்படி யாழ்.சட்டநாதர் சிவன் ஆலயத்திற்கு அருகில் உள்ள வேல்மடம் முருகன் ஆலயத்திலிருந்து காலை கொடிச் சீலை சிறிய ரதத்தின் மூலம் பருத்தித்துறை வீதி ஊடாக எடுத்து நல்லூர் கந்தசுவாமி ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது.





(படங்கள்- ஐ.சிவசாந்தன்)




## நல்லையில் கொடியேறும் நாள்

ஆடி அமாவாசை ஆறாம் நாளில்
அழகன் குமரன் கொடியும் ஏறுமே
நல்லைக் கந்தன் நல்லருளும் கிடைத்திடுமே
நன்மைகள் வந்து வாழ்வும் சிறந்திடுமே

ஆறுமுகனின் அழகை கண்டிட முடியுமே
ஆறுதல் அடைந்து வாழ்வும் சிறக்குமே
மனக்கண்ணால் கொடியேற்றம் காண்போம் நாமும்
மனநிறைவு பெறுவோம் குமரன் அருளால்

அரியாலையூர் ஜசிதீபன்

## சேவற்கொடி ஏறுது நல்லூரிலே!

கொடி ஏறுது! சேவற் கொடி ஏறுது!
நல்லூர் முருகன் கோவிலிலே!
கொடிகள் பல பறக்குது நல்லூரின் வீதியிலே
அன்புக் கொடி அறிவுக் கொடி
அருள் கொடியும் அவனே!
பண்புக் கொடி சிவவொளியை
பற்றி நிற்கக் காணீர்!
உயிர்க் காற்றில் எழுதி வைத்த
ஓவியமாம் மஞ்சள்
துயரில்லா வாழ்வுக்குத் தூதாகும் காவி
மனிதவுடற் கூறவற்றை
மரக் கொடியில் காட்டி
இனிமைதரப் பறக்கவிட்ட
இயல்புண்மை உணர்வீர்

புலவர் செ.பரமநாதன்
மண்டைதீவு -02

## கொடியபிணியை வடிவேலால் அழிப்பாய்...

அடியவர்க்கு எளியவனாய்
அன்பரெல்லாம் கேட்பவற்றை
அள்ளியள்ளி ஈவதிலே
வள்ளலென்றே பேரெடுத்தாய்
நெடியபுகழ் கொண்டிலக்கி
நிமிர்ந்து நிற்கும் யாழ்ப்பாணம்
நல்லூரிற் குடியிருந்து கோலோச்சும் குருபரனே
கொடியபிணி கொரோனாவாம்
குவலயத்தை வாட்டுதப்பா
கோடிகோடி மாந்தருக்குக் கூற்றுவனாய் ஆனதப்பா
வடிவேலால் அதையழித்து வாழவிடு மனுக்குலத்தை
வண்டமிழர் நாயகனே வணங்கியுன்னை
வேண்டுகின்றேன்!

சின்னையா சிவபாலன்,
கோண்டாவில்

## சந்தம் சிந்தும் நல்லைக் கந்தன்

அந்த மாதி யேது மற்ற
அவனி காக்கும் வேலவன்
விந்தை நல்லைப் பதியி லூற்று
வீற்றி ருக்கும் காவலன்
சிந்தை யூறிக் கொடியு மேறித்
திருவி ழாத்தொ டங்கவே
எந்த வூழும் நீக்கிக் காக்க
எழுவன் நல்லைக் கந்தனே!

கலாபூஷணம் சந்தக்கவிஞர்.
நவ.பாலகோபால்

# பிறப்புப் பதிவு சான்றிதழில் இனம், பெற்றோரின் திருமண விபரத்தை நீக்க இடமளியோம்: விமல்

(கொழும்பு)

**பிறப்புச்சான்றுப் பதிவின் போது இனம், பெற்றோரது திருமண விபரம் ஆகியவற்றை நீக்குவதற்கு பதிவாளர் திணைக்கள நாயகம் எடுத்துள்ள தீர்மானத்திற்கு ஒருபோதும் ஆதரவு வழங்கமாட்டோம் என்றும் பாரம்பரிய உரிமைகளை ஒருபோதும் விட்டுக்கொடுக்க முடியாது. தேசியம், இன தனித்தும் ஆகியவற்றை முன்னிறுத்தியே அரசாங்கம் செயற்படும் என்றும் கைத்தொழில் அபிவிருத்தி வளங்கள் முகாமைத்துவ அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.**



கடுவலை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இனத்திற்கும் நாட்டுக்கும் முக்கியத்துவம் வழங்கியதன் காரணமாகவே மக்கள் தொடர்ந்து ராஜபக்ஷக்களுக்கு ஆதரவு வழங்குகிறார்கள்.

2015 ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் இடம்பெற்ற தவறு தொடர்ந்து திருத்திக் கொள்ளப்படுகிறது. ஜனாதிபதியின் கொள்கைத் திட்டங்களை மக்கள் முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள். தேசியம், பாரம்பரிய மரபுரிமைகள் ஆகியவை எமது அடையாளமாக காணப்படுகிறது. அரசியல் காரணிகளுக்காக தேசிய மரபுரிமைகளை விட்டுக் கொடுக்க முடியாது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தவுடன் கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் மரபுரிமைகள் தொடர்பில் ஆராய விசேட ஜனாதிபதி செயலணியை நியமித்தார். பிறப்புச் சான்று பதவின் போது இனம் தொடர்பான விடயங்களை நீக்குவதாக பதிவாளர் திணைக்கள பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளமை திருத்திக் கொள்ளப்பட வேண்டிய விடயம்.

எமது அரசாங்கம் தேசியத்தையும், நாட்டின் தனித்துவத்தையும் முன்னிறுத்தி செயற்படும் ஆகையால், இவரது தீர்மானத்திற்கு ஒருபோதும் ஆதரவு வழங்கவும் முடியாது. அதனை நிறைவேற்றவும் இடமளிக்க முடியாது.

இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அறிவுறுத்தியுள்ளேன் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# புவனேகபாகு மன்னனின் கட்டடத்தை உடைத்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை

## மகிந்தவிடம் அறிக்கை கைளிப்பு

(கொழும்பு)

வரலாற்றுச் சிறப்புமிக்க புவனேகபாகு மன்னனுடைய அரச சபை கட்டடம் உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் இடைக்கால அறிக்கை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.



பிரதமர் ஊடகப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது. குறித்த அறிக்கையின் ஊடாக 5 யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கட்டடத்தின் முன் பகுதியில் கூரைப் பகுதிக்கும் மற்றும் ஜன்னல்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதால் குறித்த பகுதிகளை தொல்பொருள் ரீதியில் பாதுகாக்க வாய்ப்புள்ளது.

முழுவதுமாக சேதமடைந்துள்ள பின்பகுதியின் மரத் தூண்கள் மற்றும் செங்கல்கள் உள்ளிட்ட கட்டடத்தின் பொருட்கள் பாதுகாப்பாக உள்ளது.

அதன் காரணமாக இதற்கு முன்னர் தொல்பொருள் திணைக்களத்தினால் விரிவாக பதிவு செய்யப்பட்டுள்ளதால் மற்றும் பாதுகாப்பு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதால் குறித்த பழைய பகுதிகளை மீண்டும் வழமைக்கு கொண்டு வர வாய்ப்புள்ளது. எனவே பழைய கட்டடம் விரைவில் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த கட்டடத்தை தொல்பொருள் திணைக்களம் கையகப்படுத்துதல்.

குறித்த இடத்தை விரிவாக்கும் திட்டத்தில் திருத்தத்தை மேற்கொள்ளுமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பரிந்துரை செய்தல். இந்த அழிவுக்கு காரணமானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்தல்.

அழிவுக்கு பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனம் மற்றும் நபர்கள் ஊடாக பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான ஏற்பாடுகளைப் பெறுதல்.

பிரதமரின் ஆலோசனையின் பேரில் புத்த சாசனம் மற்றும் கலாசார அலுவல்கள் செயலாளரால் இந்த குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஆறுவகை முட்டாள்கள்!

“சேர் இந்த உலகத்திலே அறிவாளிகளை விட முட்டாள்களிடம் தான் அதிக எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டி இருக்கு” என்றார் அனுபவப்பட்ட ஒருத்தர். அப்படியா என்று கேட்டேன். ஆமாம் என்று சொன்ன அவர் அதற்கான காரணம் என்ன என்கின்றதையும் சொன்னார். ஒரு அறிவாளி கிழிந்த துணியை ஒரே ஒரு முட்டாள் கூட சேர்ந்து தைத்துக்கொள்ள முடியும். ஆனால் ஒரு முட்டாள் கிழிந்த துணியை முப்பது அறிவாளிகள் சேர்ந்தால் கூட அதை ஒழுங்காக சேர்த்து தைத்து விட முடியாது என்றார். வாஸ்தவம் தானே இவன் கன்னா பின்னா என்று கிழிச்சிடுவான். எல்லாம் சரி, ஒரு முட்டாளை எவ்வாறு அடையாளம் கண்டு பிடிக்கின்றது? முட்டாளே வந்து எங்கள் முன்னால் நின்று நான் ஒரு முட்டாள் என்று சொல்லிக் கொண்டு இருக்கமாட்டான். அவனுடைய ஒரு சில நடவடிக்கைகளை வைத்துத்தான் அதைக் கண்டு பிடிக்க வேண்டும். ஆறு வகையான அறிகுறிகளை வைத்து ஒரு முட்டாளை அடையாளம் கண்டு பிடிக்கலாம் என்று சொல்லுகின்றார் ஒரு பெரியவர் (வாரியார் சுவாமிகள்). முட்டாளை அறிய ஆறு வகை:

காரணம் இல்லாத கோபம், பயனில்லாத பேச்சு, முன்னேற்றம் இல்லாத மாறுதல், பொருத்தம் இல்லாததைப் பற்றி ஆராய்தல், அந்நியனை நம்புதல், பகைவரை நண்பராகக் கருதுதல் இதுதான் அவர்களுக்கு அடையாளம்.


அர்த்தமில்லாமல் கோபப்படுபவர்களை நிறையப் பார்க்கின்றோம்.அவர்கள் எல்லாம் மேற்படி ஆசாமிகள்தான். போன் சரியாக இல்லை என்றால் அதை ‘பொத்’ என்று வேகமாக வைக்கின்றார்கள். பேனாவில் மை முடிந்து போய் விட்டதென்றால் அதை வேகமாக மேசை மேலே குத்திக்குத்திப் பார்க்கின்றார்கள். யார் மேலே உள்ள எரிச்சலை கதவை படார் என்று சாத்துகிறார்கள். இதெல்லாம் அர்த்தம் இல்லாத கோபம். செருப்பு நம்முடைய காலைக் கடிக்கின்றது. அதற்காக பதிலுக்கு அதைப் போய் நாங்கள் கடித்துக்கொண்டு இருக்க முடியுமா? சரி இதை விடுங்கள். இன்னொரு வகை ஆசாமிகள் எப்படித் தெரியுமா? பயனில்லாத பேச்சுப் பேசுகின்றவர்கள். ஒற்றுமையாக வாழ வேண்டும் என்கின்றதைப் பற்றி ஒரு மணி நேரம் பேசினேன் சேர் என்றார் ஒருத்தர். “அப்படியா?” என்று ஆச்சரியப்பட்டேன். “சரி அப்புறம் என்ன ஆச்சு?” என்று கேட்டேன். கடைசியிலே சண்டை கலாட்டாவிலே முடிந்து விட்டது சேர் என்றார். பிறகு பேசிய பேச்சிற்கு என்ன பிரயோசனம்? சில பேர் நேரம் காலம் தெரியாமல் எங்கள் எதிரிலே வந்து உட்கார்ந்து கொண்டு அவர்களுக்கு என்னவெல்லாம் தெரிகின்றதோ அதை எல்லாம் பேச ஆரம்பித்து விடுவார்கள். பயனில்லாத பேச்சு. மூன்றாவது வகை எப்படி என்றால், முன்னேற்றம் இல்லாத மாறுதல். “நம்முடைய ஆள் ஒருத்தன் திருடி விட்டு சிறையில் இருந்தான். அவன் இப்போது மாறிட்டான் சேர்” என்றார் ஒருத்தர். “திருந்திட்டானா?” என்று கேட்டேன். “இல்லை சேர் முன்னர் அவன் கோயமுத்தூர் சிறையிலே இருந்தான். இப்போது அவன் வேலூர் சிறைக்கு மாறி விட்டான்” என்று அதற்கு விளக்கம் கொடுத்தார். ஒரு மனிதன் மாறிவிட்டானென்றால் அவன் முன்னர் இருந்த நிலையை விட்டு மாறி முன்னுக்கு வந்திட்டான் என்று இருக்க வேண்டும். நான்காவது பொருத்தம் இல்லாததைப் பற்றி ஆராய்தல் ...என்னடா தரையை உற்றுப்பார்த்துக்கொண்டு இருக்கிறாய்? என்று கேட்டால் ஒன்றுமில்லை இந்த எறும்பு எங்கே போய்க் கொண்டு இருக்கின்றது என்று பார்த்துக்கொண்டு இருக்கின்றேன் என்பான். இது பொருத்தம் இல்லாத ஆராய்ச்சி. ஐந்தாவது அந்நியனை நம்புதல். இது மாதிரி ஆசாமிகளை புகையிரத நிலையங்களிலே பார்க்கலாம். சேர் இந்த பெட்டியிலே பத்தாயிரம் ரூபாய் வைத்திருக்கின்றேன். இதை பத்திரமாகப் பார்த்துக்கொள்ளுங்கள். நான் போய் டிக்கெட் வாங்கிக் கொண்டு வந்து விடுகின்றேன் என்பார். போய் வந்து பார்த்தால் இவன் அந்த இடத்திலே இருக்கமாட்டான். முன் பின் அறிமுகமில்லாதவர்களை நம்புவது ஒரு முட்டாள்தனம். ஆறாவது ...பகைவரை நண்பராகக் கருதுவது. விரோதியிடம் விசுவாசமாக இருக்கின்றது என்றைக்கும் ஆபத்து. முட்டாள்களை இந்த ஆறு வகையிலே அடையாளம் காணலாம் என்பது அந்த பெரியவருடைய கருத்து. ஒருத்தன் கையிலே ஒரு சூட்கேஸ். அதற்குள்ளே பணம் பிரயாணம் செய்து கொண்டு இருந்தான்.

தூங்கி எழுந்து பார்த்தால் சூட்கேஸ் காணாமல் போய் விட்டது. யாரோ தூக்கிக் கொண்டு போய் விட்டான். இவன் பறி கொடுத்தவன். பதற வேண்டும் அல்லவா? பதறவில்லை நிதானமாக இருந்தான். “பணப்பெட்டி போய் விட்டது என்ற கவலை இல்லையா உங்களுக்கு?” என்று கேட்டார் பக்கத்தில் இருந்தவர். “பெட்டி போனால் என்ன சேர். அதைப் பத்திரமாக பூட்டித்தானே வைத்திருக்கேன். சாவி என்னிடம்தானே இருக்கின்றது. பிறகு ஏன் நான் கவலைப்பட வேண்டும்?’ என்றான் இவன்.

# முஸ்லிம் அடிப்படைவாதம் சமூகத்திற்குள் பிளவை ஏற்படுத்துகிறது-அத்துரலிய ரத்ன தேரர்

(கொழும்பு)

**இஸ்லாம் சமய அடிப்படைவாதத்தினால், நடைபெறும் சமூக பிளவுகளை தடுத்து நிறுத்த உடனடியாக தலையீடு செய்யுமாறு கோரி, எமது மக்கள் சக்தி கட்சியின் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபைக்கு நேற்று முன்தினம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.**



இது தொடர்பான ஜம்மியத்துல் உலமா சபையின் நிலைப்பாட்டை உடனடியாக தெரியப்படுத்துமாறும் இல்லை எனில் சமூகத்துக்கு தடைகளை ஏற்படுத்தும் செயல்களை தடுத்து நிறுத்துவதற்காக அகிம்சை வழி நடவடிக்கைகள் மூலம் தலையீடுகளை செய்யப் போவதாகவும் ரத்ன தேரர் தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

ஜம்மியத்துல் உலமா சபை என்பது முஸ்லிம் மக்களின் சமூக வாழ்வியலுக்கு பெரிய அழுத்தங்களை கொடுக்கக் கூடிய இஸ்லாமிய சமயத்தின் பிரதான அமைப்பாகும். இதனால், இஸ்லாமிய சமய அடிப்படைவாதம் தொடர்பாக அந்த அமைப்புக்கும் பொறுப்பு இருக்கின்றது.

அந்நிய கலாசார அடையாளங்களை ஏற்றுக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம். எனினும் சமய அடிப்படைவாதத்தை ஏற்றுக்கொள்ள தயாரில்லை.

சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகங்கள் இடையில் பிளவுகளை ஏற்படுத்த காரணமாக அமைந்த சமய ரீதியான மாற்றங்கள் அண்மைக் காலத்தில் ஏற்பட்டமைக்கு ஜம்மியத்துல் உலமா சபையும் பொறுப்புக் கூற வேண்டும்.

முஸ்லிம் நாடுகள் கூட தடை விதித்துள்ள புர்கா மற்றும் நிகாப் போன்ற ஆடைகளை அணியும் அடிப்படைவாத நிலைமையை மாற்ற வேண்டும்.

மத்ரசா பாடசாலை தடை செய்யப்பட வேண்டும். அத்துடன் சிறுமிகளை திருமணம் செய்துக்கொள்ளும் சட்டத்தை மாற்றி, நாட்டில் அமுலில் இருக்கும் பொதுவான திருமணச் சட்டத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

அல்லாவை நம்பாதவர்களைக் கண்டித்து, அவர்களை பலவந்தமாக மத மாற்றம் செய்யும் கருத்துக்கள் பரப்பப்படுவதை நிறுத்த வேண்டும் எனவும் அத்துரலிய ரத்ன தேரர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஐ-4)

# போராட்ட வடிவம் மாற்றம் ஆயுதம் மட்டுமே இல்லை



(கொழும்பு)

போராட்ட வடிவத்தையே இன்று மாற்றியுள்ளதாகவும் போராளிகள் நாங்கள் ஒன்றிணைந்து இந்த மாற்றத்தினை செய்துள்ளோம். இன்று எங்களிடம் ஆயுதம் மட்டுமே இல்லை என தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அம்பாறை மாவட்ட வேட்பாளருமான விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் சார்பில் பாராளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரிக்கும் வகையிலான பொதுக்கூட்டம் மட்டக்களப்பு, திருப்பழுகாமத்தில் நேற்று நடைபெற்றது.

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் உப தலைவரும் போரதீவுப்பற்று பிரதேச சபையின் உறுப்பினருமான சு.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அம்பாறை மாவட்ட வேட்பாளருமான விநாயகமூர்த்தி முரளிதரன் கலந்து கொண்டார்.

அத்துடன் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் களமிறங்கியுள்ள தலைமை வேட்பாளர் வித்தியாபதி முரளிதரன் உட்பட வேட்பாளர்களும் கலந்து கொண்டனர். (ஐ-4)

# நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை பெறமுடியாத நிலையில் அரசாங்கம்

## விஜயமுனி சொய்சா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக்கொண்டு அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து பேசிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தற்போது அதுபற்றி பேசுவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் கூறியுள்ளார். மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை அல்ல நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப்பலத்தையும் பெற்றுக் கொள்ள முடியாத சிக்கலை பொதுஜன பெரமுன எதிர் நோக்கி வருகிறது.

சாதாரண பெரும்பான்மையை எப்படி பெறுவது என்ற சவாலை பொதுஜன பெரமுன எதிர்நோக்கியுள்ளது. சாதாரண பெரும்பான்மை கிடைக்காது போனால் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைக்கும் எதிர்பார்ப்பும் பொதுஜன பெரமுனவுக்கு உள்ளது.

இதனால் பொதுஜன பெரமுனவின் தேர்தல் ஆட்டம் களையிழந்துள்ளதுடன் ஓகஸ்ட் 5 ஆம் திகதி ஆகும் போது அவர்களின் தேசிய அரசாங்கம் என்ற கனவும் கலைந்து போகும் எனவும் விஜித் விஜயமுனி சொய்சா மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# மாவட்ட செயலாளர்களை சந்திக்கவுள்ள தேர்தல்கள் ஆணையாளர் தேசப்பிரிய

(கொழும்பு)

பொதுத்தேர்தல் தொடர்பில் மாவட்ட செயலாளர்கள் மற்றும் உதவித்தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

நாளையதினம் குறித்த கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். தபால் மூல வாக்களிப்பின் சதவீதத்தை மீளாய்வு செய்து தேவை ஏற்படுமாயின் மேலதிக தினம் ஒன்றை வாக்களிப்பதற்காக வழங்குவது தமது எதிர்பார்ப்பாகும் என்று ஆணைக்குழுவின் தலைவர் அறிவித்துள்ளார்.

அரச ஊழியர்களை தேர்தல் கடமைகளில் இணைந்து கொள்வது கட்டாயமானதாகும் என்றும் அவர் வலியுறுத்தினார். இதேவேளை தனிமைப் படுத்தும் மத்திய நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கான வாக்களிப்பு தபால்மூல வாக்களிப்பை போன்று இடம்பெறும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இவர்களுக்கான வாக்களிப்பு எதிர்வரும் 31 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. வாக்காளர்களின் இரகசிய வாக்களிப்பிற்கான உரிமை எந்த வகையிலும் நீக்கப்பட மாட்டாது என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (ஐ-4)

# தப்பியோடிய கொரோனா நோயாளியைக் கண்டுபிடிக்க உதவியவர்களுக்கு பரிசு

(கொழும்பு)

ஐ.டி.எச்.வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்ற கொரோனாத் தொற்றாளரை கண்டுபிடிக்க உதவிய கொழும்பு தேசிய வைத்தியசாலையின் ஊழியர்களுக்கு பொலிஸ்மா அதிபரினால் சிறப்பு பரிசுத் தொகையொன்று வழங்கப்படவுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு ஆதரவளித்த அனைத்து ஊழியர்களுக்கும் இது வழங்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

நேற்று அதிகாலை வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்ற தொற்றாளர் முற்பகல் 10 மணியளவில் கொழும்பு தேசிய வைத்தியசாலை வளாகத்தில் வைத்து கண்டுபிடிக்கப் பட்டார்.

குறித்த தொற்றாளரை கண்டுபிடிக்க உதவிய இராணுவத்தினர் உள்ளிட்ட அனைத்து ஊடக நிறுவனங்கள், சமூக ஊடகங்கள் மற்றும் பொதுமக்களுக்கு பொலிஸார் தமது நன்றியைத் தெரிவித்துள்ளனர். (ஐ-4)

# பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் அடையாள வேலை நிறுத்தம்

(கொழும்பு)

பொது சுகாதார பரிசோதகர்கள் நேற்று ஒருநாள் சுகவீன அடையாள விடுமுறை போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இதுவரை தமது கோரிக்கைகளுக்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து உரிய தீர்வு வழங்கப்படவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மகேந்திர பாலசூரிய, ஒரு சிலரின் அவசியமற்ற தீர்மானங்களே இந்த நிலைமைக்கு காரணம் எனக் கூறினார். ஆகவே, பொது சுகாதார பரிசோதகர்களின் உண்மையான பிரச்சினைகளை கண்டறிந்து தனிமைப்படுத்தல் சட்டத்திற்கு அமைய தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

31

கலாநிதி முருகர் குணசிங்கம்

இவ்வாறான ஒரு பின்னணியில் மலேசியா வாழ் ஈழத் தமிழர்களின் சமூக நிலைமைகளைப் பற்றிச் சுருக்க மாகக் காண்போம்.

மலேசியத் தீபகற்பத்திற்குச் சென்ற யாழ்ப்பாணக் குடாநாட்டுத் தமிழர்கள் முதலில் தொழில் புரிந்து பணம் சேர்த்து தமது குடும்பக் கடமைகளை நிறை வேற்றி விட்டு மீண்டும் தமது சொந்த நாட்டுக்குச் சென்றுவிட வேண்டும் என்ற நோக்கில் ஒரு தற்காலிகப் பயண மாகவே **(Sojourn)** கருதினர்.

ஆனால் மலேசியாவில் கிடைத்த வசதியான வாழ்க்கை, அமைதியான அரசியல் சூழ்நிலை அவர்களை மாற்றி விட்டது.

அதனால் தமது குடும்பங்களையும் உறவினர்களையும் மலேசியாவிற்கு அழைத்து வந்து அங்கேயே நிரந்தர மாக வாழத்தொடங்கினர்.

அவர்களுள் கணிசமான தொகை யினர் மலேசியாவில் 1930களில் ஏற் பட்ட பொருளாதார மந்தநிலை தொடர் ந்து நடைபெற்ற இரண்டாம் உலக மகா யுத்தம் அத்துடன் 1941 - 1945 வரை யில் ஜப்பான் மலேசியாவைக் கைப் பற்றிக் கொண்டது ஆகியவற்றின் விளைவாகத் தமது குடும்பத்தினருடன் சொந்த நாட்டுக்குத் திரும்பி வந்ததைப் புள்ளி விபரங்கள் மூலம் அறிய முடிகிறது.

மற்றவர்கள் மலேசியா - சிங்கப் பூரைத் தமது நிரந்தர வதிவிடமாகக் கொண்டனர். அவ்வாறு குடிபெயர்ந்த யாழ்ப்பாணக் குடாநாட்டுத் தமிழர்களு க்கு உத்தியோகம், பணவசதி, குடும்ப வாழ்க்கை, வசதியான வாழ்க்கையும் சொந்த நாட்டைவிட்டு, தமது உறவு களை விட்டு, தமது சமய, மொழி, பண் பாட்டுத் தொடர்புகளை எல்லாம் அறுத் துக்கொண்டு ஒரு புலம்பெயர் நாட்டில் புதிய சூழலில் அந்நிய மக்கள் மத்தியில் அந்நிய மொழி, பல்லினக் கலாசாரச் சூழலில் வாழ்வது நிச்சயம் அவர்களுக் குப் பாரிய வெறுமையையும் உளவியல் தாக்கத்தையும் ஏற்படுத்தத் தவறியிரு க்க மாட்டாது.

அப்போதுதான் அவர்கள் தமது தேசம் பற்றிய தமது உறவுகள், மக்கள், தமது மொழி, மத, பண்பாட்டு விழுமி யங்களையும் அதன் நடைமுறைகளின் அருமையையும் பற்றி மிக ஆழமாகப் புரிந்தும் உணர்ந்தும் இருப்பார்கள்.

மேலும் சொந்த நாடு பற்றிய உணர் வும் தமது தனித்துவத்தையும் அடை யாளத்தையும் பேணிக்காக்க வேண்டு மென்ற உணர்வும் மேற்கூறப்பட்ட எல்லாவற்றிற்கும் மேலாக அவர்களை ஆட்டிப்படைத்திருக்கும்.


இதன் விளைவாகவே மலேசியத் தீபகற்பத்திற்குப் புலம்பெயர்ந்து சென்ற யாழ்ப்பாணக் குடாநாட்டுத் தமிழர்கள் ஒரு தமிழ்ச் சமூகமாக ஒன்றுகூடி பல்வேறுபட்ட சாதனைகளைப் புரிந்துள் ளார்கள் என்பதனை கடந்த நூறு ஆண்டு களுக்கும் மேலான வரலாறு காட்டி நிற்கின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டுத் தமிழர் கள் கூடுதலாக நகர்ப்புறங்களில் தொழில் புரிந்தமையால் அவர்களது சமூக வாழ் க்கை அந்த நகரங்களைச் சார்ந்ததா கவே காணப்படுகின்றது.

மலாயர், சீனர், இந்தியர்கள் கூடு தலாக வாழும் நகரங்களில் அவர் களுடன் சேர்ந்து வாழ வேண்டிய நிலை யில் யாழ்.குடாநாட்டுத் தமிழர்கள் தாம் ஓர் ஈழச்சமூகமாக தமது தனித்துவத் தையும் அடையாளத்தையும் பேணிக் காக்க வேண்டிய பாரிய பொறுப்பு இருந் துள்ளது.

தமது சமய, மொழி, கலை, பண்பாடு, பொருளாதார, அரசியல் நிலைமைகளில் தம்மை இணைத்து ஓர் ஒற்றுமைப்பட்ட சமூகமாக வாழ வேண்டும் என்ற நிலை ப்பாட்டில் கவனமும் அக்கறையும் செலு த்தி உள்ளனர்.

அத்தோடு தமது பிறந்த நாட்டுக்கும் தமது மக்களுக்கும் பங்களிப்புகளைச் செய்ய வேண்டும் என்ற உணர்வும் மேலோங்கிக் காணப்பட்டது. எனவே அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளில் தம்மை ஒருங்கு சேர்த்து இணைந்து உள்ளனர்.



மலேசியத் தீபகற்பத்தில் உள்ள நகரங்களில் சமூக நலன்சார்ந்த பல் வேறு நிறுவனங்களைத் தொடங்கி னார்கள். அவைகளினூடாக சமய, மொழி, கல்வி, பண்பாடு, தொருளா தாரம், அரசியல் சார்ந்த செயற்பாடுகள் முடுக்கி விடப்பட்டன.

யாழ்ப்பாணக் குடாநாட்டுத் தமிழர் களால் அமைக்கப்பட்ட நிறுவனங்களுள் பின்வருவனவற்றைச் சிறப்பாக குறிப்பிட லாம்.

தொடக்கத்தில் 1899 ஆம் ஆண்டு தைப்பிங் இலங்கையர் சங்கம் **(Ceylon Association of Taiping)**, 1900 ஆம் ஆண்டு செலாங்கூர் இலங்கைத் தமிழர் சங்கம் ஆகியன தொடங்கப்பட்டன.

இவற்றில் நகர்ப்புறங்களில் வாழும் உத்தியோகத்தர்கள் இடம்பெற்றனர். பொழுதுபோக்கு நிகழ்வுகளாகவே நடை பெற்று வந்தன. இவற்றைத் தவிர கோலாலம்பூர் இலங்கைத் தமிழ் சங்கம், சிங்கப்பூர் இலங்கைத் தமிழ் சங்கம் என்பனவும் முக்கியமானவை ஆகும்.

இச்சங்கங்களில் தமிழ்ச் சைவர்க ளும் தமிழ்க் கிறிஸ்தவர்களும் ஒருங் கிணைந்தே செயற்பட்டு வந்தனர் என்ப தையும் அறிய முடிகிறது.

மேலும் இந்து - சைவ மத வழிபாட் டிற்காகவும் அதன் எழுச்சிக்காகவும் ஈழத் தமிழர்கள் பல சங்கங்களை அமைத் துத் தமது செயற்பாடுகளைத் தொடங்கி இருப்பதையும் காண முடிகிறது.

குறிப்பாக செலாங்கூர் இலங்கைச் சைவர் சங்கம் - கோலாலம்பூர், சைவ சித்தாந்த சங்கம் - கோலாலம்பூர், திருக் கேதீஸ்வர திருப்பணிச்சபை என்பனவற் றைக் குறிப்பிடலாம்.

1890களில் இருந்தே பல சைவக் கோயில்கள், திருமண மண்டபங்கள், நூல் நிலையங்களைக் கட்டி உள்ளனர். இவ்வாறாகத் தமது புதுச் சமூக வாழ்க் கையைத் தொடங்கி உள்ளனர்.

இவற்றைவிட விளையாட்டு, பொழுது போக்குகளுக்காக உடற்பயிற்சி விளை யாட்டுச் சங்கங்களையும் உருவாக்கி னர். **Tamilan Physical Culture Association, Ceylon Sports Club - Singapore** என்பன இவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

ஆண்டுதோறும் விளையாட்டுக் போட்டிகளையும் நடத்தி உள்ளனர். அதேபோல் கலை மரபுகளைப் பேணு வதற்காக "சங்கீத அபிவிருத்தி சபை" என்ற சபையும் தோற்றம் பெற்றது.

அதனூடாக கலை, பண்பாட்டு விழு மியங்களைப் பாதுகாத்துக் கொண்டனர். மேலும் யாழ்ப்பாணக் கல்லூரியிலும் சென்ஜோன்ஸ் கல்லூரியிலும் படித்த பழைய மாணவர்கள் அந்தப் பள்ளிக ளின் பேரில் பழைய மாணவர் சங்கங் களைத் தொடங்கினர்.

அதன்வழியாக அவர்கள் ஒன்று கூடி புதிய ஒருங்கிணைப்பை ஏற்படுத்திக் கொண்டனர். தமது சொந்த நாடு, சொந்த மக்கள் பற்றிய சிந்தனைகளுக்கும் உணர்வுகளுக்கும் இடம் அளித்து தேசப் பற்றினையும் தேசிய உணர் வினையும் ஏற்படுத்தினர்.

மலேசிய அரசியலில் பங்கு ஏற்ப தோடு இலங்கை அரசியலிலும் தமது பங்கை வழங்கத் தவறவில்லை. எடு த்துக்காட்டாக 1910 இல் இலங்கையில் நடைபெற்ற அரச சபைக்கான படித்த அங்கத்தவர் தெரிவில் சேர். பொன். இராமநாதனைத் தெரிவு செய்யும் விடயத்தில் தீவிரமாக ஈடுபட்டார்கள்.

பெரும்பான்மையான சங்கங்கள், செலாங்கூர் தமிழ் சங்கத்தினரின் ஒத்துழைப்புடன் தமது சேவைகளைத் தொடர்ந்து செய்து வருவதையும் அறிய முடிகிறது.

1934 ஆம் ஆண்டு செலாங்கூர் தமிழ்ச் சங்கம், தம்மோடு இணைந்து செயலாற்றும் 23 தமிழர் சங்கங்களை ஒன்று சேர்த்து தமிழ் மக்களின் நலன் கருதி ஒரு மகாநாட்டையும் நடத்தி உள்ளது.

மேற்கூறப்பட்ட பல்வேறு நடவடிக் கைகள் ஈழத்தமிழர்களை ஒருங்கி ணைத்துடன் அவர்களது தேசிய அடையாளத்தையும் உணரச் செய்தன.

கல்வி, வேலைவாய்ப்பு, பொருளா தார வளர்ச்சி போன்ற துறைகள் சார்ந்த சேவையினையும் செய்து வந்ததையும் அறிய முடிகிறது.

அவ்வாறான நடவடிக்கைகளுக்கு அக்கால ஈழப்பத்திரிகைகளான உதய தாரகை, ஈழகேசரி, இந்து சாதனம் போன்றவை உரமூட்டும் தொடர்புச் சாதனங்களாக விளங்கின.

முக்கியமாக மலாய் புங்குடுதீவு ஐக்கிய சங்கம், உரும்பிராய் சங்கம், கரையூர் சங்கம், வட்டுக்கோட்டை யூனி யன், மலாய் ஊரெழு சேவை சங்கம், சுழிபுரம் ஐக்கிய சங்கம், சங்கானை யூனி யன் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

இதன் விளைவாக தமிழர்கள் தாம் பிறந்து வளர்ந்த ஊர்களைப் பற்றியும் அங்கே வாழும் மக்களைப் பற்றியும் சிந்தித்து பல்வேறு செயற்பாடுகளில் இறங்குவதையும் காண முடிகிறது.

மலேசியா வாழ் ஈழத்தமிழர்கள் தமது சமய, மொழி, கலை, கலாசாரம், கல்வி, பொருளாதார, அரசியல் துறைகளில் தம்மை ஒருங்கிணைத்து ஒரு தனித்து வமான தேசிய அடையாளம் கொண்ட இனமாக கூட்டுச் சமூகமாகத் தம்மை ஆக்கிக் கொண்டதோடு நிற்க வில்லை.

மேற்படி துறை சார்ந்த பணிகளைத் தம் தேசத்திற்கும் மக்களுக்கும் விரிவு படுத்தினார்கள். மலேசியத் தீபகற்பம் எங்கும் காணப்படும் பல்வேறுபட்ட தமிழ்ச் சமூக நிறுவனங்கள், சங்கங் கள், தமிழ் மொழிப் பாடசாலைகள், ஆங்கில மொழிப் பாடசாலைகள், கலை பண்பாட்டு பாடசாலைகள், விளையாட்டு பொழுது போக்குத் திடல்கள் இவை அனைத்தும் சான்றுகள் ஆகின்றன.

(தொடரும்)

# இராசிபலன்

**25.07.2020**
**ஆடி 10, சனிக்கிழமை**
**பஞ்சமி பிற்பகல் 2.36 மணிவரை**
**உத்தரம் பிற்பகல் 5.19 மணிவரை**
**சுபநேரம் 3.02-4.32 மணிவரை**
**இராகுகாலம் 9.02-10.32 மணிவரை**
**சந்திராஷ்டமம் சதயம், பூரட்டாதி**
**சஷ்டி விரதம்**

வளவன்

**மேஷம்**: தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், தேகநலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள்.

**ரிஷபம்**: பாராட்டும் புகழும் கூடும் நாள், மனமகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமை தரும் செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்**: தொழில் நலன்கருதி எடுத்த முயர்சிகள் கைகூடும், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன சுகமுண்டு.

**கடகம்**: பொருளாதார நலனில் அக்கறை காட்டுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கூட்டு முயற்சி வெற்றி தரும்.

**சிம்மம்**: உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி**: பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், விரும்பிய உணவுப் பொருட்களை சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்**: குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், பணப் புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**விருச்சிகம்**: எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு**: பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்**: குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், ஆன்றோரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்**: தேவையற்ற எதிர்ப்புகளை சந்திக்கும் வாய்ப்புண்டு, குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள்.

**மீனம்**: உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், போசன சுகமுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

காட்டின் நடுவேயிருக்கும் தெளிந்த நீரோடைபோல வாழக் கற்றுக்கொள்

# பெரஹரவை இலக்கு வைத்த பயங்கரவாதிகள்

## வெளிவந்த புதிய தகவல்

**(கொழும்பு) உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் பெரஹரவை இலக்கு வைத்து இரண்டாவது தாக்குதல் நடத்துவதற்குப் பயங்கரவாதிகள் திட்டம் தீட்டியிருந்ததாக அரச புலனாய்வு சேவை அதிகாரி தெரிவித்துள்ளார்.**

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் சாய்ந்தமருது பகுதியிலுள்ள வீடொன்றில் ஏற்பட்ட வெடிப்பு சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.

இந்த விசாரணைகளுக்கு அமைய கிழக்கு மாகாணத்தில் சேவையாற்றிய அரச புலனாய்வு சேவை அதிகாரியிடம் நேற்று முன்தினம் இரண்டாவது நாளாகவும் வாக்குமூலம் பெறப்பட்டது. இதன்போதே குறித்த அதிகாரி இந்த அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரான சிப்லி பாறுக், சஹ்ரான் ஹாசிம் தலைமையிலான தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பிற்கு பாரியளவு அரசியல் ரீதியான ஒத்துழைப்புகளை வழங்கியதாகவும் குறித்த அதிகாரி இதன்போது தெரிவித்துள்ளார்.

மேலும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் இரண்டாவது தாக்குதல் நடத்துவதற்கான திட்டம் காணப்பட்டதாக முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் தெரியவந்ததாக குறிப்பிட்ட அதிகாரி, தாக்குதலின் பின்னர் கைது செய்யப்பட்ட நவ்பர் மௌலவி வழங்கிய வாக்குமூலத்திற்கு அமைய இந்த விடயம் தெரியவந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# போதைப்பொருளுடன் கைதான மதுவரி அதிகாரி பணி நீக்கம்



(கொழும்பு)

சுமார் 6 இலட்சம் ரூபா பெறுமதியான ஐஸ்ரக போதைப் பொருளுடன் மதுவரி அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் அதிகாலை புத்தளம் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் போதை ஒழிப்புப் பிரிவினரால் சாலியாவெள பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட மதுவரி அதிகாரி மதுவரித் திணைக்கள அநுராதபுர அலுவலகத்தில் கடமையாற்றுபவர் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்ட மதுவரி அதிகாரியுடன் சிறு குழந்தை உட்பட வருகை தந்த 5 பெண்களும் இரண்டு இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்டவர்கள் அநுராதபுரம் கெக்கிராவ பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் கூறினர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட அநுராதபுரம் மதுவரித் திணைக்கள அதிகாரியை உடன் அமுலுக்கு வரும் வகையில் பணிநீக்கம் செய்துள்ளதாக மதுவரித் திணைக்கள ஊடகப் பேச்சாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார். (ஜ-4)

# ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு மீண்டும் ஆரம்பிக்கப்படும்

(கொழும்பு)

குறைந்த வருமானம் பெறும் ஒரு இலட்சம் குடும்ப உறுப்பினர்களுக்கு தொழில் வாய்ப்புகள் வழங்கும் திட்டம் தேர்தல் முடிந்தவுடன் மீண்டும் ஆரம்பிக்கப்படுமென பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஒரு இலட்சம் தொழில் வாய்ப்பு மற்றும் பட்டதாரிகளுக்கு அரச நியமனம் என்பன தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவரின் ஆலோசனைக்கமைய தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

தேர்தலின் பின்னர் அதனைத் தொடர்ந்து முன்னெடுப்பதில் எந்தத் தடையும் கிடையாதென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொதுஜன பெரமுன சார்பில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

எதிர்வரும் காலத்தில் உருவாக்கப்படும் பொதுஜன பெரமுன அரசு நாட்டின் விவசாயத்துறை முன்னேற்றம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தும்.

விவசாயத் துறையில் நவீன முறைகளை அறிமுகம் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. விவசாய காப்புறுதி



மற்றும் விவசாய ஓய்வூதிய காப்புறுதி என்பவற்றை மேலும் பலப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக கூறிய பிரதமர், பால் உற்பத்தி கைத்தொழிலுக்கு புதிய தொழில்நுட்பமொன்றை அறிமுகம் செய்ய உள்ளதாகவும் கூறினார். (ஜ-4)

# இந்தியப் புலனாய்வு அமைப்பின் உளவாளியாக செயற்பட்ட சாரா

## அரச புலனாய்வு அதிகாரி சாட்சியம்



(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் தற்கொலை குண்டுதாரிகளின் ஒருவரான சாரா ஜெஸ்மின் என்று அழைக்கப்படும் புலஸ்தினி இராஜேந்திரன், இந்திய புலனாய்வு அமைப்பிற்காக செயற்பட்டாரென தகவல் வெளியாகியுள்ளது.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணைகளுக்காக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகியிருந்த அரச புலனாய்வு பிரிவின் அதிகாரியொருவரே இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "தொடர் குண்டுத் தாக்குதல் இடம்பெறப்போகின்றது என்பது தொடர்பாக முன்கூட்டியே கட்டுவாப்பிட்டிய தற்கொலை குண்டுதாரியின் மனைவி சாரா ஜெஸ்மின், இந்தியப் புலனாய்வு அமைப்பிற்கு தெரிவித்ததாக தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.


இவ்விடயம் குறித்து அரச புலனாய்வுப் பிரிவினர் கண்காணித்து வருகின்றனர்.

அத்துடன் தொடர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான முக்கிய விடயங்களை சஹ்ரானின் குழுவிற்குள் இருந்து இந்திய புலனாய்வு அமைப்பு பெற்றுள்ளது.

இதன்காரணமாகவே இந்தியாவினால் முன்கூட்டியே எச்சரிப்பதற்கு முடிந்துள்ளது.

இதேவேளை சாரா உயிரிழுந்து விட்டதாக ஆரம்பத்தில் கருதப்பட்டபோதிலும், அவர் இந்தியாவுக்கு கடல்வழியாக தப்பிச்சென்றுள்ளார் என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன எனக் பொலிஸார் கூறினர்" என புலனாய்வுப் பிரிவின் அதிகாரி ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்துள்ளார். (ஜ-4)

# ஈழத்தமிழரை தலைமையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள தானியங்கி ரோபோ



(டென்மார்க்)

ஈழத்தமிழர் ஒருவரை தலைமையாளராக கொண்டு டென்மார்க் தெற்கு பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் கொரோனா வைரஸ் பரிசோதனைக்காக தொண்டையில் இருந்து ஒட்டியெடுக்கப்படும் மாதிரிக்கான தானியங்கி ரோ்போவை உருவாக்கியுள்ளனர்.

உலகின் முதன்முதலாக இந்த தானியங்கி ரோபோ உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் சுகாதார வல்லுநர்கள் நோய்த்தொற்று அபாயத்திற்கு ஆளாக மாட்டார்கள் என்பது ஆராய்ச்சியில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த ரோபோ தொண்டையில் சரியான இடத்தினை அடைகின்றது. பின்னர் அதிலிருந்து மாதிரியை சேகரிக்கின்றது.

அதைத்தொடர்ந்து இந்த ரோபோ சேகரித்த மாதிரியை கண்ணாடி குடுவைக்குள் வைத்து முத்திரையிட மூடியை திறக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# உணவகங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

அண்மைக்காலமாக நாட்டின் சந்தையில் உணவுப் பொருட்கள் சிலவற்றுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் உணவகங்களில் மஞ்சள் தூளுக்கு பதிலாக டை பயன்படுத்தி உணவுகள் தயாரிக்கப்படும் மோசடி நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு மஞ்சள் தூளுக்கு பதிலாக டை பயன்படுத்துவதற்கான ஆதாரங்கள் தன்னிடம் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அது மாத்திரமின்றி மக்கள் பயன்படுத்தும் தேயிலைத் தூள் மற்றும் மசாலாத் தூளின் தரம் தொடர்பில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவற்றிற்கு டை பயன்படுத்தி சந்தையில் விற்பனை செய்யும் மோசடி தகவல்களை வெளிப்படுத்துவதற்கு தாம் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான மோசடிகள் குறித்து பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ஜ-4)

# வாக்குப்பெட்டிகளை பாதுகாக்க விசேட திட்டம்




(கொழும்பு)

பொதுத் தேர்தலின் பின்னர் வாக்கெண்ணும்பணிகள் ஆரம்பிக்கும் வரை வாக்குப் பெட்டிகளை பாதுகாப்பதற்கான விசேட திட்டமொன்று செயற்படுத்தப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய ஒவ்வொரு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களிலும் இருந்து இரண்டு பிரதிநிதிகள் வீதம் வாக்குச்சாவடியில் தங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை வாக்கெண்ணும் பணிகள் இடம்பெறும் பகுதிகளில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (ஜ-4)

# தப்பிச்சென்ற கொரோனா நோயாளி கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் கைது

(முல்லேரியா)

முல்லேரியா தேசிய தொற்று நோய் வைத்தியசாலையில் இருந்து தப்பிச்சென்ற நோயாளர் ஒருவர் இராணுவத்தினரால் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலை வளாகத்தில் வைத்து குறித்த நோயாளர் கண்டுபிடிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

முல்லேரியா தேசிய தொற்று நோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நோயாளர் ஒருவர் நேற்று அதிகாலை வைத்தியசாலையில் இருந்து தப்பிச்சென்றிருந்தார்.

இதனைத் தொடர்ந்து தப்பிச்சென்றவரை கண்டுபிடிப்பதற்காக குழுவொன்று அமைக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரட்ன தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்று குறித்த நோயாளி கொழும்பு தேசிய வைத்தியசாலை வளாகத்தில் வைத்து இராணுவத்தினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)



# பொதுத்தேர்தலுக்கு வீடு திரும்ப விசேட போக்குவரத்து வசதிகள்

## ஓகஸ்ட் முதல் வாரத்தில் நீண்ட விடுமுறை

(கொழும்பு)

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்காக கொழும்பு மற்றும் புறநகர்ப்பகுதிகளிலிருந்து கிராமப் புறங்களுக்குச் செல்லும் மக்களுக்காக, போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ஓகஸ்ட் 3 ஆம் திகதி பௌர்ணமி தின விடுமுறையாகையால், அரச மற்றும் தனியார் பிரிவு ஊழியர்களுக்கு நீண்ட விடுமுறை கிடைப்பதால், எதிர்வரும் 31 ஆம் திகதி கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளிலிருந்து கிராமப் புறங்களுக்கு செல்வோரின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

இவ்வாறு செல்வோருக்கு நெரிசல் இல்லாமல், கொரோனா வைரஸ் சுகாதார ஆலோசனைகளுக்கு அமைய, போக்குவரத்து சேவைகளை வழங்குவதே தமது நோக்கம்.

இதற்கமைய, மேலதிகமாக 600 தனியார் பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இ.போ.சவினால் அவர்களிடமுள்ள அனைத்து பேருந்துகளையும் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புகையிரத திணைக்களத்துக்கு சொந்தமான அனைத்து புகையிரதங்களையும் சேவையில் ஈடுபடுத்துவதோடு, சில சேவைகளை மேலும் பல நகரங்கள் வரை நீடிக்கவும், விசேட புகையிரத சேவைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் செயற்படுத்தப்படும் வேலைத்திட்டத்தின் கீழ், புதிய பேருந்துகளுக்கு தற்காலிக அனுமதிப் பத்திரங்கள் வழங்கல், பெஸ்டியன் மாவத்தையில் அமைந்துள்ள தனியார் பேருந்து தரிப்பிடத்தில் தொற்று நீக்கம் செய்தல் உள்ளிட்ட போக்குவரத்து கண்காணிப்புகளை, பணிக்குழு தொடர்ச்சியாக மேற்கொள்ளவுள்ளது.

ஆயினும், எதிர்வரும் பொதுத் தேர்தல் காரணமாக கிராமப் புறங்களுக்குச் செல்வோரின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்பதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, இ.போ.ச., புகையிரத திணைக்களம் ஆகியவற்றுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)



# ஆன்மீகம்

## எதிர்காலம், புதிர்காலம்; நிகழ்காலம், மகிழ்காலம்!

(நேற்றைய தொடர்ச்சி)

எல்லாம் போனால் வரும். காலமும் நேரமும் போனால் வராது. நோட்டுப் புத்தகமோ, பாடப் புத்தகமோ தொலைந்து போய்விட்டாலும் திரும்ப வாங்கிக் கொள்ளலாம். ஆனால், தேர்வு நேரத்தில் ஒரு மாணவன் நான்கு நாட்கள் வீணடித்து விட்டால் போனது போனதுதான். இன்னொரு மாணவனிடத்திலே கடன் கேட்க முடியாது" காலம் சென்றால் சென்றதுதான். அதனால் காலம் பொன் போன்றது என்பது கூட சரியல்ல. காலம் உயிர் போன்றது என்றுதான் உரைத்திட வேண்டும். ஏனென்றால் உயிர் போனால் மீண்டும் பெறமுடியாது என்பதுதானே உறுதி. "காலத்தின் அருமை தெரிந்து சுறுசுறுப்பும், விறுவிறுப்பும் கொண்டு செயல் புரிபவனிடம் சாவே சற்றுக் காலம் தாழ்த்தித்தான் நெருங்குகிறது" என்கிறார் பாக்ஸ்டர் என்ற பேரறிஞர்.

"சிறுவயதில் நான் மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறேன், எங்கள் அப்பாவிற்கு வேலை பாதியிலேயே பறிபோய்விட்டது. அவர் பணிபுரிந்து வந்த ஆலையை மூடிவிட்டார்கள். வீட்டில் வறுமை தாண்டவமாடியது. ஒரே பிரச்சினை என்று கடந்த கால சோகங்களை நினைத்து கண்ணீர் சிந்துவதும், இழந்த சுகங்களை எண்ணி ஏக்கப் பெருமூச்சு விடுவதும் பலருக்கு ஒரு பழக்கமாகவே இருக்கின்றன.

'எனக்கு ஒரு பையன். இரண்டு பெண்கள். இவர்களைக் கரையேற்றி விட வேண்டும். நாளுக்கு நாள் விலைவாசி வேறு விஷம் போல் ஏறிக்கொண்டிருக்கிறது' இவ்வாறு எதிர்காலத்தை இருள் மயமாகவே கற்பனை செய்து கொள்வதும், சவால்களைச் சமாளிக்க நினைக்காத கோழைத்தனமும் கொண்டு குறுகிப் போகின்றவர்களும் பலர். நிகழ் காலத்தில் நிம்மதியாக வாழ்கின்றவர்களை தேடிக் கண்டு பிடிப்பதே சற்று சிரமமாகத்தான் இருக்கிறது.

**கடந்த காலம் - அது நடந்த காலம்!**
**எதிர் காலம் - அதுவோ புதிர் காலம்!**
**நிகழ் காலம் - அதுவே மகிழ் காலம்!**

- என்பதை நாம் உணர்ந்தால் வாழ்க்கை வெற்றிப்படிகளை விரைவாகக் கடந்து விடலாம். "இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்ற எண்ணமதைத் திண்ண முற இசைத்துக் கொண்டே தின்று விளையாடி இன்புற்று இருந்து வாழ்வீர்" என்ற பாரதியார் "சென்றது இனி மீளாது. மீண்டும் மீண்டும் சென்றதை எண்ணியே சிந்தை மயங்காதீர்" என்றும் சொல்கிறார். இன்றே, இப்போதே, இக்கணமே செயல்புரியும் வினை வீரர்களாக நாம் விளங்க வேண்டும் என்கிறார் பாரதியார்.

**நேற்று என்பது உடைந்த பானை**
**நாளை என்பது மதில்மேல் பூனை**
**இன்று என்பதுதான் கையில் உள்ள வீணை!!**

"மீட்டத் தெரிந்தானுக்குத்தான் வீணை தனக்குள் இருக்கும் இரகசியங்களை வெளிப்படுத்துகிறது. நிகழ்ந்து கொண்டிருக்கும் கணத்தில் மகிழ்ந்து கொண்டிருப்பவனையும், செயலில் திகழ்ந்து கொண்டிருப்பவனையும், இந்த உலகம் புகழ்ந்து கொண்டிருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். வறுமையும், வளமையும் மாறிக் கொண்டே இருப்பவை. தரித்திரம் என்றால் ஒருவரிடத்திலேயே தரித்து இருக்க மாட்டோம். நீங்கி விடுவோம் என்று பொருள். செல்வம் என்றாலும் இங்கேயே நிரந்தரமாக இருந்துவிட மாட்டோம் இவ்விடத்தை விட்டுச் செல்வோம்" என்று பொருள். ஓரிடத்தில் நிலைத்திராதது செல்வம்!

'தான் வாழும் தாமரைப் பூவிலேயே தங்காமல் ஒவ்வொரு இரவும் அதை விட்டு நீங்கிச் செல்கிறாள் ஸ்ரீதேவி' என்று வடமொழிப்பாடல் ஒன்று கவி நயத்தோடு கூறுகிறது. ஆனால், திருவள்ளுவர் ஒரு செய்தி சொல்கிறார். எங்கும் செல்லவிடாமல் திருமகளை உன் வீட்டிலேயே கட்டிப் போட்டு வைக்கும் கயிறு ஒன்று இருக்கிறது. அதுதான் ஒத்திப் போடாமல் காலம் அறிந்து அதனுடன் ஒன்றி கடமை ஆற்றுவது என்கிறார்:

**'பருவத்தோடு ஒட்ட ஒழுகல்**
**திருவினைத்**
**தீராமை ஆர்க்கும் கயிறு'.**

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 130 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 160 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 250 | 300 |
| தக்காளி | 50 | 80 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 80 |
| கோவா | 140 | 120 | 120 | 120 |
| கரட் | 100 | 160 | 140 | 160 |
| பூசணி | 40 | 40 | 40 | 50 |
| புடோல் | 50 | 60 | 60 | 80 |
| வாழைக்காய் | 150 | 120 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 140 | 150 | 150 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 70 | 80 |
| பாகற்காய் | 200 | 140 | 150 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 60 | 100 |
| கருணைக் கிழங்கு | 120 | 130 | 100 | 100 |
| பயற்றங்காய் | 100 | 120 | 80 | 80 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 100 | 100 | 100 | 100 |
| கறிமிளகாய் | 200 | 180 | 140 | 240 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 80 | 80 |
| போஞ்சி | 150 | 180 | 180 | 240 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | -- | 80 |
| கீரை - 1 பிடி | 30 | 25 | 30 | 40 |
| தேசிக்காய் | 200 | 150 | 150 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 60 | 60-80 |
| இராசவள்ளி | -- | -- | 280 | -- |
| வெங்காயப்பூ | 200 | 180 | 200 | 200 |
| முள்ளங்கி | 100 | 80 | 50 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 30 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 60 | 50 | 50 |




## கீரிப்பிள்ளை

தேவப்பட்டினம் என்றொரு கிராமத்தில் மாரப்பன் என்றொரு குயவன் தன் மனைவியுடன் வாழ்ந்து வந்தான். பல வருடங்களாக அவர்களுக்குக் குழந்தை பிறக்கவில்லை.

அதனால் ஒரு கீரிப்பிள்ளையை எடுத்து தன் குழந்தையைப் போல் வளர்த்து வந்தனர். ஒரு நாள் குயவனின் மனைவி சுந்தரி கருவுற்றாள். ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

வெகுகாலம் கழித்து பிறந்த முதல் குழந்தை என்பதால் அக்குழந்தை வெகு செல்லமாக வளர்க்கப்பட்டது.

ஒருநாள் தண்ணீர் குடத்தை எடுத்துக் கொண்டு சுந்தரி குளக்கரைக்குச் சென்றாள். செல்லும் முன் தன் கணவனிடம் குழந்தை தூங்குகிறது.

அருகிலேயே இருந்து பார்த்துக் கொள்ளுங்கள். குழந்தையைக் கீரி கடித்துவிடப் போகிறது என்று கூறிவிட்டுச் சென்றாள்.

குயவனுக்கு திடீர் தாகம் ஏற்பட தண்ணீர் அருந்த சமையலறைக்குள் நுழைந்தான். அந்த நேரம் பார்த்து ஒரு கருநாகம் வந்து குழந்தையின் தொட்டிலின்மேல் ஏற ஆரம்பித்தது.

அதைப் பார்த்த கீரிப்பிள்ளை அப்பாம்பைத் துண்டு துண்டாகக் கடித்துக் குதறிவிட்டது.

தண்ணீர் குடத்துடன் வந்த சுந்தரி கீரியின் வாயெல்லாம் இரத்தமாக இருந்ததைப் பார்த்து பதறிப்போனாள். ஐயோ, நம் குழந்தையை கீரிப்பிள்ளை கடித்து விட்டது என்று தவறாக நினைத்து ஆத்திரத்தில் சுந்தரி அக்கீரியின் மேல் நீர்க்குடத்தை தூக்கிப் போட்டாள்.

கீரிப்பிள்ளை அதே இடத்தில் வலி தாங்காமல் இறந்து விட்டது. சுந்தரி தன் குழந்தைக்கு என்ன ஆயிற்றோ என்ற பதற்றத்தில் உள்ளே ஓடிச்சென்றுப் பார்த்தாள்.

குழந்தை தொட்டிலில் உறங்கிக் கொண்டு இருந்தது. பிறகு என்ன நடந்திருக்கும் என்று சுற்றும் முற்றும் பார்த்த அவளுக்கு ஒரே அதிர்ச்சி.

தரையில் பாம்பின் உடல் பல துண்டுகளாக சிதறி இருந்தன. அவளுக்கு உண்மை புரிய ஆரம்பித்தது.



அடடா! பாம்பைக் கொன்று விட்டு இரத்தத்துடன் இருந்த கீரிப்பிள்ளையைப் பார்த்துக் குழந்தையைத்தான் கடித்து விட்டதோ என்று தவறாக எண்ணி விட்டேனே. அருமை யாக வளர்த்த கீரியைக் அவசரப்பட்டுக் கொன்று விட்டேனே! என்று கண்ணீர் விட்டுக் கதறினாள்.

சிறுகணநேரத்தில் நடந்து முடிந்து விட்ட இந்த நிகழ்ச்சிகளை கேட்டு அறிந்து கொண்ட குயவன் தனது மனைவியை சமாதானப்படுத்தினான்.

**நீதி :**
**பதறிய காரியம் சிதறும்**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## ஆயிரத்தில் ஒருவன்

சங்க காலப்பிராமி கல்வெட்டுக்கள் கிடைத்த போது அவற்றில் பல கல்வெட்டுக்கள் பிராகிருதமும் தமிழும் கலந்த ஒரு மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டிருக்கலாமோ என்று எண்ணிப் பலரும் குழம்பிப் போனார்கள். அவை படிக்கவும் கடினமாக இருந்தன.

பதினைந்தாம் நூற்றாண்டுக்குப் பிறகு வெட்டப்பட்ட கல்வெட்டுக்களைச் சுலபமாகப் படித்து விட முடியும். காரணம் அதற்குப் பிறகு, தமிழ் எழுத்துக்களில் அவ்வளவாக மாற்றம் கொண்டு வரப் படவில்லை.

கல்வெட்டுக்கள் எவ்வளவுக்கெவ்வளவு பிந்தியதோ அவ்வளவுக்கவ்வளவு படிப்பதற்கு மிகவும் கடினமாக இருக்கும்.

இந்த நிலையில் படிக்க முடியாத கல்வெட்டுக்கள் எல்லாம் தமிழ்மொழியில் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் தான் என்று பெரும் குழப்பத்தைத் தீர்த்து வைத்தார் கே.வி. சுப்பிரமணிய ஐயர். கூடவே அந்தக் கல்வெட்டுக்களின் பொருளையும் சொன்னார்.



சோழர்காலக் கல்வெட்டுக்கள்

பொதுவாகக் கல்வெட்டுக்களில் பார்ப்போம், யாரோ ஒரு முதியவர் எழுதியது போல எழுத்துக்கள் வளைந்தும் நெளிந்தும் எழுதப் பட்டிருக்கும். அப்படிப்பட்ட கல்வெட்டுக்களை எப் படிப்படிப்பார்கள்? தஞ்சாவூர் சீனிவாச புரத்து ராஜராஜன் நகர் கல்வெட்டை எப்படிப் படித் திருப்பார்கள்?

கல்வெட்டுப் படிப்பது என்பது உண்மையிலேயே கடினமான ஒன்றாகும். இன்று நாம் பார்க்கிற கல்வெட்டுக்கள் எல்லாமே பல நூற்றாண்டுகளாக மண்ணுக்குள் இருப்பவை.

கல்வெட்டுக்கள் மழையில் நனைந்து, வெயிலில் காய்ந்து, கற்கள் சேதாரமாகி, சில இடங்களில் கல்வெட்டுக்கள் முழுமையாக இல்லாமல் சிதைந்து போயிருக்கும்.

உடனே அந்தக் கல்வெட்டுப் படிக்க லாயக்கு இல்லாதது என்று ஒதுக்க முடியாது. சிதைந்த இடங்களை விட்டு விட்டு மற்ற இடங்களைப் படிக்க முடியும். அதிலிருந்து என்ன விதமான அரிய தகவல்கள் கிடைக்கின்றனவோ, யார் கண்டார்.

சோழர்காலக் கல்வெட்டின் மொழிநடை, இலக்கிய மொழிநடையில் இருக்காது. கல்வெட்டு மொழிநடை என்பது முழுமையாகக் கொச்சை வடிவில் இருக்காது என்றாலும் ஆவண மொழி நடையில் அதாவது ய்தார்த்தமான மொழிநடையில் இருக்கும்.

ராஜராஜன் காலத்துக் கல்வெட்டுகள் அனைத்தும் தமிழில் தான் எழுதப்பட்டிருந்தன. பல்லவர்களின் கிரந்தக் கல்வெட்டுக்களையும் பிற்காலத்தில் வந்த நாயக்கர், விஜய நகர மன்னர்களின் தெலுங்குக் கல்வெட்டுக்களையும் தவிர மற்ற தமிழ் மன்னர்களின் கல்வெட்டுக்கள் எல்லாம் அநேகமாகத் தமிழிலேயே எழுதப்பட்டுள்ளன.

(தொடரும்)

# நல்லாட்சியில் இன நல்லிணக்கம் இல்லாமலாக்கப்பட்டது- பிரதமர்

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப பெருமளவு நிதியை செலவிட்டது. ஆனால் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தவில்லை. இருந்த நல்லிணக்கம் கூட இல்லாமலாக்கப்பட்டுள்ளது. வாக்குகளை பெறுவதற்காக போலியான வாக்குறுதிகளை ஒருபோதும் வழங்கமாட்டோம்.

கிழக்கு மக்கள் யானைச் சின்னத்திற்கு ஆதரவு வழங்கினார்கள். ஆனால் கடந்த அரசாங்கம் யானை- மனித மோதலுக்கு தீர்வை வழங்கவில்லை.

கிழக்கு மாகாணத்தில் உள்ள அடிப்படை பிரச்சினைகளுக்கு நிச்சயம் தீர்வு வழங்குவோம். அம்பாறை நகரம் நிர்வாக கேந்திர மையமாக அபிவிருத்தி செய்யப்படும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அம்பாறை- கல்முனை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக் கையில்,

நல்லாட்சி அரசாங்கத்தில் தேசிய நல்லிணக்க அமைச்சு இருந்தது. ஆனால் இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் காணப்படவில்லை. கொழும்பில் உள்ள நட்சத்திர ஹோட்டல்களில் பெருமளவில் நிதியைச் செலவிட்டு நல்லிணக்கம் தொடர்பான நிகழ்ச்சிகளை முன்னெடுத்து இனங்களுக்கிடையில் விரிசல் நிலையை ஏற்படுத்தினார்கள்.

30 வருடகால சிவில் யுத்தம் கிழக்கு மாகாணத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்கள் ஆகியவை பல இளைஞர், யுவதிகளுக்கு கேள்விக்குறியாக்கப்பட்டது. குறுகிய காலத்தில் யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவந்து அனைத்து இன மக்களின் சுதந்திரம், பாதுகாப்பினை உறுதிப்படுத்தினோம். போலியான வாக்குறுதிகளை வழங்கி மக்களின் ஆதரவை பெற்றுக் கொள்ள வில்லை.

தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப கடந்த அரசாங்கத்தில் நல்லிணக்க அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டது.

கொழும்பில் உள்ள ஹோட்டல்களில் பெருந்தொகையானநிதி செலவிடப்பட்டு நல்லிணக்கம் தொடர்பான நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. ஆனால் நாட்டில் நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்படவில்லை. முஸ்லிம் சமூகத்தினரது வியாபார நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்தன. இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் தோற்றம் பெற்று அமைதியற்ற நிலை ஏற்பட்டது. நாங்கள் பிரச்சினைகளை சுமுகமாக வெற்றி கொண்டோம் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# பிரதான வங்கிகளில் பாரிய தொகை பணத்தை கொள்ளையடித்த கும்பல்

(கொழும்பு)

பிரதான அரச வங்கி மற்றும் தனியார் வங்கி ஒன்றில் ஒரு கோடி ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடன் அட்டைகள் மூலம் கொள்ளையடிக்கும் இந்த கும்பலை தேடி குற்ற விசாரணை திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சர்வதேச ஹக்கர்கள் மற்றும் இலங்கை குழுவொன்று இணைந்து மேற்கொண்டதாக சந்தேகிக்கப்படுகின்ற இந்த நடவடிக்கையில் இரண்டு வங்கிகளிலும் பல வருடங்களாக பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

குறித்த இரண்டு வங்கிகளும் மேற்கொண்ட முறைப்பாட்டிற்கமைய குற்ற விசாரணை திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

வெளிநாடுகளுக்கு சென்ற இலங்கையர்களுக்கு குறித்த வங்கிகளில் வழங்கப்படும் கடன் அட்டை மூலம் பொருட்கள் பெற்றுக் கொண்டு இந்த மோசடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

கடன் அட்டைகளில் பணம் கொடுக்கல் வாங்கல் மேற்கொண்டதன் பின்னர் குறித்த நாடுகளில் இருந்து வரும் முறை இந்த வங்கிகளில் இல்லை. அதற்காக வங்கி அதிகாரிகளை ஈடுபடுத்தி தரவுகளை கணக்கில் சேர்க்கும் முறையையே இந்த வங்கிகள் இரண்டு கடைப்பிடித்து வருகின்றது.

கணக்குகளில் பணம் குறையும் மோசடிகளை புரிந்து கொண்ட போதிலும் அதனை வங்கிகளினால் கண்டுபிடிக்க முடியாமல் போயுள்ளது. இரகசிய எண்களின் தவறினால் இந்த சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். வங்கி அதிகாரிகளின் பொறுப்பற்ற செயற்பாடு காரணமாக இந்த நிதி மோசடி இடம்பெற்றமை உறுதியாகியுள்ளது. (ஜ-4)



## குடும்பஸ்தரின்...

றில் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வந்திருந்தார்.

இந்நிலையில் நேற்றையதினம் காலை வீட்டின் பின்பகுதியில் இருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் வீட்டின் முதலாம் மாடியிலிருந்து தவறி வீழ்ந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவத்தில் செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியைச் சேர்ந்த மோகன் சிவகுமார் (வயது - 35) என்ற நபரே மரணமடைந்துள்ளார்.

சடலம் நேற்றுக்காலை மீட்கப்பட்டு உடற்கூற்று பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,299)

## கடலில் தவறி...

தீப மீனவரின் சடலம் காங்கேசன்துறை கடற்கரையில் கரையொதுங்கியுள்ளது.

கடந்த 22ஆம் திகதி புதன்கிழமை ஊர்காவற்றுறை கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்காகச் சென்ற 72 வயதுடைய மீனவர் கடலில் தவறி வீழ்ந்திருந்தார்.

இந்நிலையில் சக மீனவர்கள், கடற்படையினரும் இரண்டு நாட்களாக கடலில் தொடர்ந்து தேடிய போதிலும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்நிலையில் நேற்றுக் காலை காங்கேசன்துறை கடற்கரையில் குறித்த நபரின் சடலம் கரையொதுங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,8)

## கிளிநொச்சியில்...

முன்தினம் வியாழக்கிழமை இரவு கிளிநொச்சி ஜெயபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மன்னார் யாழ் வீதியில் இடம்பெற்றுள்ளது.

வீதியில் தரித்து நின்ற பார ஊர்தியுடன் யாழ் நோக்கி பயணித்த வான் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் வானில் பயணித்த மூவரில் சாரதிக்கு அருகில் இருந்து பயணித்த நபர் உயிரிழந்ததுடன், சாரதி மற்றும் மேலுமொருவர் காயங்களிற்கு உள்ளாகியுள்ளனர். உயிரிழந்தவர் யாழ்ப்பாணம் மல்லாகம் பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய சுவேந்திரன் என்பவராவார்.

மேலதிக விசாரணைகளை ஜெயபுரம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,100)

## தமிழ் மக்களை...

றிக் கொள்ளுங்கள் என ஜனாதிபதியிடமும் ஏனையோரிடமும் கேட்டுக் கொள்கிறேன் என சி.ஐ.டி விசாரணை தொடர்பில் நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் எழுத்தில் அனுப்பி, சென்ற டிசம்பர் மாதத்தில் பத்திரிகைகளில் வெளிவந்த கேள்வி பதில் பற்றி ஏழு மாதங்களின் பின்னர் தேர்தலுக்கு முன்னர் பொலிஸாரை அனுப்பிக் கேட்டது விந்தையாக உள்ளது.

தமிழ் மக்களை வெருட்டிப் பணிய வைக்கலாம் என்று அரசாங்கம் நினைத்தால் தயவுசெய்து உங்களின் எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள் என்று ஜனாதிபதியிடமும் மற்றையவர்களிடமும் கேட்டு வைக்கின்றேன்.

இவ்வாறான செயல்களை எதிர்நோக்க வேண்டிவரும் என்று தெரிந்து கொண்டே நான் அரசியலுக்குள் நுழைந்தேன். ஒரு வேளை சம்பந்தரின் அரசியலை நடத்தியிருந்தால் என்னை எவரும் கேள்வி கேட்க வந்திருக்கமாட்டார்கள். ஆனால் நான் மக்களுடன் சேர்ந்திருப்பவன். எனது இணக்க அரசியல் மக்களுடன் தான்.

ஆகவே தப்பாக எங்களை மதிக்காதீர்கள் என்று அரசாங்கத்தினரை நான் கேட்டுக் கொள்கின்றேன் என்றார். (ம-3)

## வட்டுக்கோட்டை...

ரால் கைது செய்யப்பட்டனர்.

யாழ். கிளிநொச்சி வேட்பாளர் ஒருவருடைய சுவரொட்டியை ஒட்டிய நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிமிருந்து வாகனம் ஒன்றும் ஒரு தொகை சுவரொட்டிகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (ம-3,104)

## விக்னேஸ்வர...

துறை ரேவடி உல்லாசக் கடற்கரை மைதானத்தில் இடம்பெற்றது.

இதன்போது கூட்டம் நடைபெறுவதற்கு முன்பு மேடை மற்றும் கதிரைகள் என்பன மோப்ப நாய் மற்றும் கருவிகள் கொண்டு பொலிஸார் தீவிர சோதனை மேற் கொண்டதுடன் படையினரும் குவிக்கப்பட்டு கடும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. (ம-3)

## நல்லூர்க் கந்த...

கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் கோவிலுக்கு வரும் அடியவர்கள் கட்டாயம் அடையாள அட்டை கொண்டு வரவேண்டும் என யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

இன்று ஆலயத்திற்கு வரும் அடியவர்கள் அனைவரும் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறப்புச் சோதனை சாவடியில் அடையாள அட்டையினை காண்பித்தே ஆலயத்திற்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

அத்தோடு வெளிநாட்டிலிருந்து வருபவராக இருந்தால் அவர் தனிமைப்படுத்தலுக்குட்பட்டவர் என்ற சான்றிதழை காண்பித்த பின்னரே ஆலயத்திற்கு செல்ல அனுமதிக்கப்படுவர்.

அத்தோடு அடியவர்கள் அனைவரும் முகக் கவசம் அணிந்து வருகை தர வேண்டும். அத்தோடு சுகாதார நடைமுறையினை பின்பற்றும் முகமாக கைகளை நன்றாகக் கழுவி உடல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, அடையாள அட்டையினை காண்பித்து, அவர்களது முகம் கமராவில் பதிவு செய்யப்பட்ட பின்னரே ஆலயத்துக்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்றும் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இம்முறை நல்லூர் உற்சவமானது மிகவும் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட்டு மிகுந்த கட்டுப்பாடுகளுடன் இடம்பெறவுள்ள நிலையில் மக்கள் பெருமளவில் ஆலயத்திற்கு வருவதை தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ம-3)

## நீதியரசர் விக்...

டாரா? என்பதை உறுதிசெய்யுமாறு கொழும்பிலிருந்து தமக்கு உத்தரவு வந்ததாக, விசாரணைக்கு வந்த அதிகாரி தெரிவித்தார்.

இலங்கையின் மூத்த குடிகள் தமிழர்களே என்பதை பொலிஸ் அதிகாரிக்கும் தெரிவித்த விக்னேஸ்வரன், தான் அவ்வாறு அறிக்கை வெளியிட்டு உண்மையை குறிப்பிட்டு, அறிக்கையின் பிரதியொன்றையும் வழங்கி வைத்திருந்தார்.

அறிக்கையை கொழும்பிற்கு அனுப்பி, தேவைப்பட்டால் தேர்தலின் பின்னர் விசாரணைக்கு வருவதாக பொலிஸார் தெரிவித்து சென்றனர்.

இது தொடர்பில் விக்னேஸ்வரன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்களுக்கு இரண்டு விடயங்களைக் கூற விரும்புகின்றேன்.

ஒன்று இன்று (நேற்று) என்னை வந்து சந்தித்து என்னிடம் ஆங்கிலத்தில் நான் எழுதிய எனது ஒரு பழைய கேள்வி-பதில் கட்டுரை சம்பந்தமாகப் பொலிஸார் விசாரணைசெய்தமை. இரண்டு அண்மையில் பிரதம மந்திரி அவர்கள் பிரபாகரன் கேட்டதைத்தான் எழுத்தில் தரமுடியாது என்று கூறியமை பற்றியன.

கொழும்பு தலைமையகப் பொலிஸாரின் பணிப்பின் பேரில் இன்று (நேற்று) பொலிஸார் என்னிடம் சென்றவருடம் டிசம்பர் மாதம் 14ந் திகதி ஆங்கிலத்தில் எழுதிய கேள்வி பதில் கட்டுரை சம்பந்தமாகக் கேள்வி கேட்டார்.

அதை எழுதியது நான் தான் என்று கேட்டு அதன் உள்ளடக்கம் பற்றி உரிய தொலைக்காட்சி மிகக் கடுமையாக விமர்சனம் செய்துள்ளது என்றும் பொலிஸாருக்குப் பல முறைப்பாடுகள் வந்துள்ளதாகவும் அவர் அறிவித்தார்.

அவர் குறிப்பிட்ட கேள்வி - பதில் என் காரியாலயத்தில் பதிவு செய்திருந்த படியால் அதன் பிரதி ஒன்றை வந்தவரிடம் வழங்கி அதை வெளியிட்டது நான் தான் என்று கூறி அதன் உள்ளடக்கம் நான் எழுதியவை என்றும் அதுபற்றிக் கேள்விகள் வேண்டுமானால் கேட்கலாம் என்றும் கூறினேன். அவர் குறித்த ஆவணத்தைத்தான் கொழும்புக்கு அனுப்பப் போவதாகவும் உள்ளடக்கம் பற்றிய கேள்விகள் தமக்குத் தரப்படவில்லை என்றும் கூறினார்.

அதனால் தாம் அதைக் கொண்டுபோய் உயர் அதிகாரிகளுடன் பேசித் திரும்பவும் வருவதாகக் கூறினார்.

நான் பதில் அளிக்க என்னிடம் கேட்கப்பட்ட கேள்வி பின்வருமாறு இருந்தது.

"மலையகத் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் மற்றைய சமூகங்களுடன் கைகோர்த்துச் செல்லும்போது வடக்கு கிழக்கு மக்கள் மட்டும் பிரிந்து நிற்பதற்குக் காரணம் என்ன?

அதற்குப் பதிலாக நான் வடக்கு கிழக்குத் தமிழ் மக்களின் தனித்துவம் பற்றிக் கூறிநாம் தொடர்ந்து சரித்திர காலத்திற்கு முன் பிருந்து வடக்கு கிழக்கை எமது பாரம்பரிய வாழ் விடங் களாகக் கொண்டிருந் ததையும், பௌத்தம் முதன் முதலில் தமிழர்களாலேயே ஏற்றுக் கொள்ளப் பட்ட தென்றும், அப்போது சிங்கள மொழி வழக்கத் திற்கு வந்திருக்க வில்லை என்றும் அம்மொழி கி.பி. 6ம், 7ம் நூற்றாண் டளவில் தான் மொழியாகப் பரிண மித்தது என்றும் பல விடயங்களைக் குறிப் பிட் டிருந் தேன்.

சிங்களவருக்கு தவறான வரலாறு அவர்கள் பற்றி அவர்களுக்கு புத்த பிக்குகள் போன்ற வர்களால் போதிக் கப்பட்டு வந்துள் ளது என்றும் கூறியிருந்தேன்.

நாங்கள் ஒரு பாரம்பரியத்தை நீண்ட வரலாற்றைக் கொண்டிருப்பதால் நாம் எமது வடக்கு கிழக்கில் சுயாட்சி கேட்டுள்ளோம் என்று அவர் அனுப்பி வைத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,8)


மஹஜன சம்பத
திகதி 2020/07/24
சீட்டிழுப்பு இலக்கம் 4193
ஆங்கில எழுத்து M வெல்லப்பட்ட இலக்கங்கள் 7 6 0 3 9 5
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2020.07.24
சீட்டிழுப்பு இலக்கம் - 294
D 41 43 51 60
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 24-07-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2488
ஆங்கில எழுத்து W வெற்றி இலக்கங்கள் 41 43 60 62
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 24/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0689
லக்கினம் மிதுனம் வெற்றி இலக்கங்கள் 16 27 45 57

மெகா பவர்
திகதி 24/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 560
T 09 வெற்றி இலக்கங்கள் 03 54 57 74

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 990
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2020.07.24
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 54,726,985/-
வெற்றி இலக்கங்கள் 01 22 39 50
ஆங்கில எழுத்து I

ராசி அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2871 வர்ணம் கரு நீலம் திகதி 24.07.2020
வெற்றி இலக்கங்கள் 04 07 26 49 கும்பம்
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 2,683,986
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

ஜய சேர்க்க
சீட்டிழுப்பு இலக்கம் 602
வர்ணம் பச்சை
திகதி 24.07 2020
Z 08 12 37 41
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,390,730
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

සංවර්ධන වාසනාව அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 352 திகதி 24.07.2020 வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 12 57 66 விதி எண் 7
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 55,924,636
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

பஞ்சம் படை என்று வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சுவமோ
நாங்களடி கிளியே-ஆறுமுகன் தஞ்சமடி.
– தவத்திரு யோகர் சுவாமிகள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பரம்பொருளின் பெரும் புகழை பாடிப் பணிதலன்றி....

நல்லூர்க் கந்தப் பெருமானுக்கு இன்று கொடியேற்றம்.

நல்லூர் முருகனின் திருவிழா என்பது தமிழ் மக்களின் பெருவிழா.

சமய பேதமின்றி அனைத்து மக்களும் பங்கேற்கின்ற நல்லூர்க் கந்தனின் திருவிழாவுக்குச் சென்று வந்தாலே அது பெரும் பேறு என்று கருதுபவர்கள் நாம்.

இதற்கு மேலாக, அலங்காரக் கந்தனைக் கண்டால் போதும். அதுவே மானிடப் பிறப்பின் பெரும் பேறு என்று வாழ்கின்ற நம்மவர்கள் ஏராளம்.

தில்லையில் பிறந்தால் முத்தி. திருவாரூரில் வாழ்ந்தால் முத்தி. காசியில் இறந்தால் முத்தி. திருவெண்ணாமலையை நினைத்தால் முத்தி என்பது நம் முன்னோர்களின் கணிப்பு.

அப்படியானால் நம் நல்லூர் முருகனுக்கு என்ன பெருமை என்று யாரேனும் கேட்டால், நல்லூர்க் கந்தனின் திருவீதியைச் சுற்றி வந்தால் முத்தி என்பேன்.

அந்தளவுக்கு நல்லூர்த் திருவீதி தெய்வீகத் தன்மை பொருந்தியது.

நல்லூர் முருகன் நம்மைக் காப்பாற்றுவான் நீவிர் எவரும் அஞ்சற்க! என்று தவத்திரு யோகர் சுவாமிகள் கூறி வைத்தது முழுதும் உண்மை.

ஆம், எத்தனையோ துன்ப துயரங்கள் வந்துற்ற போதிலும் எமக்கு நம்பிக்கை தந்தவன் அவன். நல்லூர் முருகன் இருக்கிறான். அவன் எங்களைக் காப்பாற்றுவான் என்ற ஒரே நம்பிக்கையே எங்களை ஆற்றுப்படுத்துகிறது.

அந்த நல்லூர்க் கந்தனின் திருவிழாவைக் காண வேண்டும் என்று தொழும் அடியார்க்கு அவன், திருவீதி உலா வந்து ஆறுதலும் தேறுதலும் தருவான் என்ற நம்பிக்கை அனைவருக்கும் உண்டு.

இவை ஒருபுறமிருக்க, நேற்றைய தினம் நல்லூர்க் கந்தனிடம் சென்றேன். நான் உனை மறக்கவில்லை. நீ என்னை மறந்துவிடாதே என்பதைச் சொல்வதற்காக...

நல்லூரானின் கொடியேற்றத்துக்கு முதல் நாள் (நேற்று) வைரவப் பெருமான் வீதி வலம் வருவார். நல்லூரில் முருகனின் படைத் தளபதி வைரவரே.

வைரவர் வீதி உலா வருகின்ற பூசை வழிபாட்டில் கலந்து கொண்ட அனைத்து அடியார்களும் முகக் கவசம் அணிந்திருந்தனர்.

எவரும் ஒருவரோடு ஒருவர் கதைக்கவில்லை. இதைப் பார்த்தபோதுதான் நல்லூர் முருகன் ஆலயத்தில் எழுதப்பட்டுள்ள *பரம்பொருளின் பெரும் புகழைப் பாடிப் பணிதலன்றி பிறவார்த்தை யாதொன்றும் பேசற்க ஆலயத்துள்* என்ற வாசகம் பளிச்சிட்டது.

அட, ஆலயத்துக்குள் பிறவார்த்தை பேசக் கூடாது என்பதற்காகவும் இந்த முகக் கவசம் உதவுகிறது என்று நினைத்தபோது,

அவன் தன்ர அலுவலில் மிகத் தெளிவாக இருக்கிறான் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆகவே இனிமேல் எவரும் ஆலயங்களில் தேவையற்ற வார்த்தைகளைப் பேசாதிருப்போமாக.

# தேர்தலின் போது கொரோனா பரவாது

## மகிந்த தேசப்பிரிய கூறுகிறார்

(கொழும்பு)

பொதுத் தேர்தலின் போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கொரோனா வைரஸ் பரவலுக்கான நிலைமை ஏற்படாது என்று மக்களுக்கு உறுதியளிப்பதாகக் கூறிய தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய இதற்காக சுகாதாரத் துறையினரின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் சுகாதாரத்துறையினருடன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

வாக்கெடுப்பு நிலையங்களில் கிருமி நீக்கும் செயற்பாடுகள் மாகாண தேர்தல் ஆணையாளர்களின் கண்காணிப்பில் உரிய அதிகாரிகளால் முன்னெடுக்கப்படும்.

சில விடயங்கள் தொடர்பில் வாதப் பிரதிவாதங்களின் பின்னர் இணக்கப்பாடுகளை எட்ட முடிந்தது.

நாட்டில் ஒவ்வொரு மாகாணங்களும் மாவட்டங்களும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டவையாகும்.

போதியளவு அதிகாரிகளஉள்ளமாவட்டங்களில நெருக்கடிகள் குறைவு. ஆனால் அதிகாரிகள் குறைவாகக் காணப்படுகின்ற பகுதிகளில் எவ்வாறு செயற்படுவது என்பது பற்றி ஆராயப்பட்டது என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# போதைப்பொருள் அற்ற நாட்டை எதிர்கால சந்ததியினருக்கு வழங்குவேன்

## ஜனாதிபதி கோட்டாபய உறுதி

(கொழும்பு)

போதைப்பொருள்அற்ற நாடொன்றை எதிர்கால சந்ததியினருக்கு வழங்குவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

நாட்டிலிருந்து போதைபொருளை முற்றாக இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவேன் எனவும் தெரிவித்தார்.

பல்வேறு வழிகளில் போதைப்பொருளை நாட்டிற்குள் கொண்டு வருதல மறறும்விநியோகித்தலை தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பயங்கரவாதத்திலிருந்து நாட்டை மீட்டெடுத்தது போல்போதைப் பொருளில் இருந்தும் நாட்டை மீட்டெடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவில் பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்யும் வகையில் கம்பஹா மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி கிரிபத்கொட பொது வணிக வளாகத்திற்கு முன்னால் ஏற்பாடு செய்திருந்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வேட்பாளர் பிரசன்ன ரணவீர இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தார். இம்மக்கள் சந்திப்பில் பங்குபற்றிய பேராசிரியர் சங்கைக்குரிய கும்புறு கமுவே வஜிர தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினர் ஜனாதிபதிக்கு ஆசி வழங்கினர். (ஜ-4)

# கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியில் க.பொ.த உயர்தரப் பரீட்சை 2020 இல் தோற்றவுள்ள சகல பிரிவு மாணவர்களுக்கும. யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

எனவே மாணவர்கள் அனைவரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வருகை தருமாறு அதிபர் எம். ஞானசம்பந்தர் அறிவித்துள்ளார். (5)

# இதுவரை 25 ஆயிரத்து 794 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்தனர்

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் செயற்பாட்டை நிறைவு செய்த 25 ஆயிரத்து 794 பேர் இதுவரையில் வீடு திரும்பியுள்ளதாக இராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டிலுள்ள 44 தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் 4 ஆயிரத்து 535 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை தனிமைப்படுத்தல் செயற்பாட்டை பூர்த்தி செய்த 14 பேர் நேற்று வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** பெரியபரந்தன், முட்கொம்பன், நல்லூர், பூநகரி, பள்ளிக்குடா, கௌதாரிமுனை, 66 ஆவது பிரிவு இராணுவ முகாம், Mechinity Infinity படைப்பிரிவு, பயிற்சி முகாம், பிரதேச செயலகம் பூநகரி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** ஜோசப் முகாம், SFHQ Vanni இராணுவ முகாம்இ விமானப்படை இராணுவ முகாம், விமானப்படை முகாம் றேடார் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** மன்னாரிலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார்கடற்படை முகாம், தலைமன்னார் Palmyrah house, கூல மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, Palmyrah house கரைசல், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, New Silk Road, தோட்டவெளி, Timex ஆடைத்தொழிற் சாலை, Industrial Estate, மன்னார் வைத்தியசாலை, ஆவேமரியா ஐஸ்தொழிற்சாலை, கீரி ஐஸ் தொழிற்சாலை, இலங்கை போக்குவரத்துச் சபை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், அரசாங்க அதிபர் அலுவலகம், பூட் சிற்றி, கடலேரி, சாந்திபுரம், தரவன்கோட்டை, South bar, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத் தொடர்பு நிலையம் ஆகிய பிரதேசங்களிலும், மன்சாரம் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## இறைவனை உணர...



பக்தனாக ஆக விரும்புபவன் சொர்க்கத்தை அடைவது போன்ற ஆசைகளையும் தொடக்கத்திலேயே விட்டுவிடவேண்டும். சொர்க்கம் என்பது இங்குள்ள இடங்கள் போலத்தான். இன்னும் சற்று நன்றாக இருக்கலாம். அவ்வளவுதான்.

இங்கு நமக்குச் சில துன்பங் களும் சில இன்பங்களும் உள்ளன. அங்கே ஒருவேளை துனபம்குறைந்தும் இன்பம்கூடியும் இருக்கலாம். ஆனால் இங்கே இருப்பதைவிட அங்கே அதிக ஞான ஒளி கிடையாது. அங்கே நாம் எமது நற்செயல்களின் பலனை அனுபவிக்க மட்டுமே முடியும். மனதிற்காகவோ, உடல் நலத்திற்காகவோ பிரார்த்தனை செய்வது பக்தி அல்ல என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். அது கர்மம் அல்லது புண்ணியச் செயல் அவ்வளவுதான்.

ஏதாவது பொருளுக்காகவோ, சொர்க்கத்திற்குச் செல்வது போன்றவற்றிற்காகவோ இறைவனை வேண்டுவது கர்மம் மட்டுமே. ஆண்டவனிடம் அன்பு செலுத்துபவன் பக்தனாக ஆக விரும்புபவன். இத்தகைய பிரார்த்தனைகளை விட்டுவிட வேண்டும். (தொடரும்)

**உடனடி வேலை வாய்ப்பு**

பொதிகள் சேவை நிறுவனத்திற்கு

1. அலுவலக உதவியாளர்
2. எழுதுவினைஞர் தேவை

(யாழ். நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.)

(3391)

தொடர்புகளுக்கு : 077 038 5584


### வவுனியா வடக்கு நெடுங்கேணியில்

# திருட்டுடன் தொடர்புடையவர் இளைஞர்களால் மடக்கிப்பிடிப்பு

(வவுனியா)

வவுனியா வடக்கு நெடுங்கேணி பகுதியில் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபரை இளைஞர்கள் மடக்கிப்பிடித்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

நேற்று மதியம் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பகுதியில் கடந்த சில நாட்களாக இரவு வேளையில் வீடு புகுந்து தொலைபேசிகள் , இலத்திரனியல் உபகரணங்கள் போன்றன திருடப்பட்டிருந்தன.

இவ்விடயம் தொடர்பில் நெடுங்கேணி பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந் நிலையில் குறித்த திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய நபர் நேற்று வவுனியா நகரில் உள்ள தொலைபேசி விற்பனையகத்திற்கு சென்று களவாடிய தொலைபேசியினை மிகக் குறைந்த விலைக்கு விற்க முற்பட்ட சமயத்தில் குறித்த வர்த்தக நிலையத்தில் பணியாற்றும் இளைஞர்கள் சந்தேகத்தில் குறித்த நபரை வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஆஜர்ப்படுத்தினர்.

இதன் போது பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் குறித்த பொருட்கள் நெடுங்கேணி பகுதியில் களவாடப்பட்ட பொருட்கள் என தெரியவந்துள்ளது.

(ம-3,250)


**வேலை வாய்ப்பு**

யாழ். நகரிலுள்ள எமது கணக்காளர் நிறுவனத்திற்கு அலுவலக உதவியாளர் (ஆண்கள்) தேவை. வயதெல்லை 32 லிருந்து 45 வரை. A/L தகைமை. (3386)

drsrajanayagam@gmail.com ற்கு விபரங்களை விண்ணப்பிக்கவும்.

077 105 6694

**அரசியல் விஞ்ஞானம்**

பிரத்தியேக வகுப்புக்கள், Day Class, Group Class, அரசியல் விஞ்ஞான துறையில் அனுபவமிக்க ஆசிரியர் உடன் இன்றே இணையுங்கள். (3397)

தொடர்பு : 077 048 2383

**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-9624)

0768226240






யாழ் - கிளிநொச்சி மாவட்டம்

2 "இரண்டு தேசங்கள் ஒரு நாடு" 10

ஈழத் தமிழரின் உரிமைக் குரலை ஆதரிப்போம்!

கனகரட்ணம்

**சுகாஷ்**

(சட்டத்தரணி)

விருப்பு இல 1



X 1 2 10

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

(அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்)

தாயகம் - தேசியம் - சுயநிர்ணய உரிமை

(C-107)



**பாராளுமன்றத் தேர்தல் - 2020**

TNA

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டம்

X 10

தமிழ் தேசியக் கூட்டமைப்பு

நிரந்தர அரசியல் உரிமை...

நிலையான அபிவிருத்தி...

நிலத்தினில் தமிழராய் நிமிர்ந்திட...

எங்களுக்காக எங்களில் ஒருவன்



(C-108)

**சிவஞானம் சிறீதரன்**

M.Ed., B.A, PGDE(Mt), PGDEM, Sp. Tr.(Ag)

இலங்கை தமிழ் அரசுக் கட்சி

யாழ். மக்கள்



**பாராளுமன்றத் தேர்தல் - 2020**

X யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டம் X

தமிழ் மக்கள் தேசிய கூட்டணி

நேர்மைமிகு அரசியல் தலைமையை உருவாக்க

உங்கள் வாக்குகளை மீன் சின்னத்துக்கு வழங்குங்கள்





6 நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்

தமிழினப்பற்றாளர் அவை

2 க.அருந்தவபாலன் (ஓய்வுநிலை அதிபர்)

10 தவச்செல்வம் சிற்பரன்

யாழ். இந்துவின் மைந்தன்

(Architect மொறட்டுவ பல்கலைக்கழகம்)

(C-109)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.